பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
THE EELANADU

மலர் 20 மாசி 17 ரபி அவ் 30 இதழ் 19
யாழ்ப்பாணம் புதன்கிழமை 1-3-78

# 'மீண்டும் பிரதமராகும் எண்ணம் இல்லை' - இந்திரா

சிட்னி, பெப் 28

''இந்தியப் பாராளுமன்றத்திற்குள் மீண்டும் நுழையும் எண்ணமோ அல்லது மீண்டும் பாரதப்பிரதமராக வரும் நோக்கமோ எனக்கு இல்லை'' என்று முன்னாள் இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி ஆஸ்ரேலிய ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபன நிருபருக்கு நேற்று அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

''நடந்து முடிந்த சட்டசபைத் தேர்தல்களில் 2 தென்னிந்தியமாநிலங்களில் நமது கட்சி அமோகவெற்றியீட்டியுள்ளது. இதனால் நான் மீண்டும் பாராளுமன்றம்செல்வேன் என்று அர்த்தம் இல்லை. பிரதமராக வரும் எண்ணமும் இல்லை. அந்தப்பகுதி, என் வாழ்க்கையில் முடிந்து விட்டது. நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்து மக்களுக்குத் தொண்டாற்றுவேன்'' என்று திருமதி இந்திராஇப் பேட்டியில் குறிப்பிட்டார்.

## பொலிஸார் அனுப்பிய பொய்ச்செய்தி

### வானொலிதகவல் அனுப்பிய கான்ஸ்டபிளுக்கு கமிஷன் அழைப்பு அனுப்பியது

(யாழ்ப்பாணம்) மக்கள் தாக்கிவிட்டனர் என் ''நாகவிகாரையைத் தமிழ் ரும் யாழ் புகையிரத நிலையத்தைத் தமிழர்கள் தாக்கப் போகின்றனர் என்றும் யாழ். பொலிஸ் நிலையத்திலிருந்து கொழும்பு பொலிஸ் தலைமைக் காரியாலயத்திற்கு வானொலித் தொடர்புமூலம் செய்திகள் அனுப்பப்பட்டன இப்பொய்ச் செய்தி 16ம் திகதி பகல் 10 மணிக்கு அனுப்பப்பட்டது. யாழ். பொலிஸ் நிலைய வானொலி அறையிலிருந்து கொழும்பு, பொலிஸ் மத்திய தகவல் நிலையத்துக்கு அனுப்பப்பட்ட இப்பொய்ச் செய்தியை, நாடுமுழுவதிலுமுள்ள எல்லா பொலிஸ் நிலையங்களிலும் வானொலி செய்திமூலம் கேட்கமுடிந்திருக்கும். இச் செய்தியை, கான்ஸ்டபிள் குமாரசாமி, பெரியவர் சொல்லித்தான் எழுதி அனுப்பினர். மேலதிகாரிகளின் கட்டளைப் படிதான் அவர் செய்துள்ளார். இரண்டுமணி நேரத்தின் பின், இச்செய்தியில் உண்மை இல்லை என்று அறிவிக்கப்பட்டது'' என்று சன்சோனி கமிஷன்முன், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தைச்சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் வேலுப்பிள்ளை சட்டநாதபிள்ளை நேற்று தொடர்ந்து சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

வானொலிமூலம் செய்தி அனுப்பியவரும் இப்பொழுது அம்பாறையில் கடமையாற்றுபவருமான கான்ஸ்டபிள்குமாரசாமியை இங்கு அழைக்க வேண்டும் என்று சட்டத்தரணி நேற்று கோரிக்கை விடுத்ததைத் தொடர்ந்து, அவர் இங்கு சாட்சியமளிக்க அழைக்கும்படி கமிஷனர் உத்தரவிட்டார்.

(முழுவிபரத்தையும் 4-ம் பக்கம் பார்க்க)

# 180பேருடன் கர்ப்பிணி மனைவி ஒரு லொறியில் ஏற்றப்பட்டார்!

## பாதுகாப்புக் கொடுக்க பொலிசார் மறுத்தனர்

### சன்சோனி கமிஷன்முன் மலேரியாத்தடுப்பு அதிகாரி சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

**'பொலிஸ் நிலையத்திலிருந்து அகதிகள் முகாமிற்கு, லொறி ஒன்றில் 180 பேரை அடைத்து அனுப்பினர்கள். ஆஸ்பத்திரி வார்ட்டில் அனுமதிக்கப்பட்டிருந்த என் எட்டு மாதக் கர்ப்பிணி மனைவியையும், ஊரடங்குச் சட்ட நேரத்தில், மிகக்கஷ்டப்பட்டுக் கூட்டி வந்தேன். என்மனைவியையும் அந்த நிலையில் லொறியில் ஏற்றி அனுப்பினர்கள்.**

'பொலிஸ் நிலையத்தில் இருந்த போது என் வீடு கொள்ளையடிக்கப்பட்டு தீக்கிரையாகி விட்டதாக அறிந்து கவலையால், விரக்தி மேலிட்டு, வேதனையால் ஒருமாதிரிச் சிரித்தேன் அங்கு நின்ற பொலிஸ்காரர் ஒருவர் 'என்ன சிரிக்கிறாய், இதுகாணாது எல்லாரையும் கொல்ல வேண்டும்' என்றார். 'உங்களுக்குப் பெரிய எண்ணம்' என்றும் சிங்களத்தில் ஏசினர். அகதிகள் முகாமிலிருந்து யாழ்ப்பாணம் செல்ல, காசு உள்ளவர்களையே ஏற்றினர்கள். 12 ரூபா 40 சதம் கொடுக்கவேண்டும். இதுபற்றி அரசாங்க அதிபரிடம் கேட்க 'பணமிருந்தால் பஸ்ஸில் ஏறும்' என்று அலட்சியமாகக் கூறினர்.

சன்சோனி கமிஷன் முன் சாட்சியமளித்த கல்கமுக சுகாதார நிலைய, மலேரியா தடுப்பு உத்தியோகத்தர் கனகரத்தினம் செல்வராசா மேற்கண்டவாறு கூறினர்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை, யாழ்ப்பாண எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் ஆகியோர் நேற்றைய விசாரணையின் போது வந்திருந்தனர்.

பெருந்திரளான மாணவர்கள் புத்தகக்கட்டுகளுடன், விசாரணையைப் பார்க்க வந்திருந்தனர்.

சன்சோனிக் கமிஷனால் அழைப்பாணை அனுப்பப்பட்டவர்கள், நேற்றுச் சாட்சியமளிக்க வந்திருந்தனர். புதிதாகப் பலர் சாட்சியமளிப்பதற்காக வந்து. சட்டத்தரணிகளுடன் தொடர்பு கொண்டிருந்தனர் அனுராதபுரம் புகையிரத பகுதி என்ஜினியர் திரு. ரி சிவசிதம்பரம் நேற்று நண்பகல் ஒரு மணிக்கு ரகசியமாகச் சாட்சியமளித்தார். பத்திரிகை நிருபர்கள் உட்படச் சகல பார்வையாளர்களும் வெளியேற்றப்பட்டு அவரது வாக்குமூலம், இரகசியமாகப் பதிவுசெய்யப்பட்டது.

மலேரியாத் தடுப்பு உத்தியோகத்தரான கனகரத்தினம் செல்வராசா மேலும் கூறியதாவது:- குருநாகல் மாவட்டத்தில், கல்கமுவ பகுதியில் உள்ள பகலகிரிபவ என்ற இடத்தில் ஆகஸ்ட் 77ல் கடமையாற்றினேன்.

அங்கு ஒரு வீட்டில் ஒரு பகுதியில் குடும்பத்துடன் இருந்தேன், ஆகஸ்ட் 18ம் தேதி காலை நான் வேலைக்குப் போனேன், அப்போது எனக்குக் கலவரம்பற்றி எதுவும் தெரியாது ஏனெனில் நான் கல்கமுவாவிலிருந்து 2 மைல் உள்ளே இருந்தேன். நான் வீதியால் போனபோது, அங்குள்ளவர்கள் என்னைச் சுட்டிக்காட்டி ஏதோ கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

கிராமத்தில் ஒரு வீட்டிற்குப் போனேன். அப்போது அவர்கள் ''தாங்கள் வரமாட்டீர்கள் என நினைத்தோம்'' என்றார்கள். பின் அங்கு, தெளிகருவியால் மருந்து அடிக்க நான் மேற்பார்வை செய்துகொண்டிருந்தேன். காலை 8.05 மணிக்கு மருந்து தெளிக்க ஆரம்பித்தார்கள்

காலை 11 மணிக்கு எங்கள் இலாகா ஜீப் வண்டி வந்தது. அதில் சுகாதார இன்ஸ்பெக்டரும் சாரதியும் எனது நண்பர் ஒருவரும் இருந்தனர்.

#### கலவரம் ஆரம்பம்

கல்கமுவாவில் இனக்கலவரம் தொடங்கிவிட்டது. மோசமாகப் போய்க்கொண்டிருக்கிறது. உடனே எங்களுடன் வரவேண்டும் என்று எனக்குக் கூறினர்கள்.

நான் எனது சயிக்கிளையும் பைல்களையும், பிரதம தொழிலாளியிடம் ஒப்படைத்துவிட்டுச் சென்றேன்

வழியில் தனிப்பட்ட வைத்தியநிலையம் நடாத்தும், தற்காலிகவேலைநீக்கம் செய்யப்பட்ட ஒரு அப்போதிக்கரி நண்பரைச் சந்தித்தேன்.

என்னசெய்யப்போகிறீர்கள்? என்று கேட்டேன்.

தான் பொலிசுக்கு போனதாகவும், அவர்கள் பாதுகாப்பு அளிக்க மறுத்துவிட்டதாகவும், உடனடியாக கல்கமுவா போவதாகவும் அவர் கூறினர்.

நான் என் வீட்டிற்குப் போனேன்.

கமிஷனர்: வீட்டிற்குநடந்து போனீரா? இல்லை ஜீப் வண்டியில் போனேன். வீட்டைப் பூட்டி திறப்பை வீட்டுக்காரரிடம் ஒப்படைத்துவிட்டு மனைவி பிள்ளையுடன் ஜீப்பில் ஏறினேன். 11 40 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டேன்.

டபிள்யு எம் டிங்கிரி பண்டா என்ற என் நண்பன் வீட்டிற்குச் சென்றோம். அன்றிரவு அங்கு தங்கினோம். அங்கு 1. 30 மணிக்கு வந்தேன்.

#### கொள்ளையடித்தனர்

அங்கு நின்று பார்த்தபோது மக்கள் கல்கமுவ கடைகளை கொள்ளையடித்துப் புகையிலை, சீமெந்து மற்றும் பொருட்களை எடுத்துச்செல்வதைப் பார்த்தேன்,

மறுநாள் 19ம் திகதி டிங்கிரி பண்டாவின் தகப்பன், எங்களை அங்கிருந்து அனுப்பிவிடும்படி மகனிடம் வலியுறுத்தினர், டிங்கிரி பண்டாவிடம் அங்கிருந்து போக ஏற்பாடு செய்யுமாறு சொன்னேன், என் வீட்டில் எல்லாவற்றையும் விட்டுவிட்டு வந்துள்ளதாகவும். அவரிடம் கூறினேன், பின்னர் ஜீப் வந்தது, அதில் கல்கமுவ சுகா

(8- பக்கம் பார்க்க)

## 'அமிரு'க்கு பயமுறுத்தலா? அவரே தரும் விளக்கம்

(தெல்லிப்பளை)

'இன்றைய பத்திரிகைகள் சிலவற்றில் எனக்கு உடல்தீங்கு விளைவிப்பதாக சிலர் பயமுறுத்தியதாக வெளிவந்த செய்தி கண்டு ஆச்சரியமடைந்தேன்'' என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அறிக்கையில் அவர் மேலும் தெரிவிப்பதாவது: நானும் எனது மனைவியும் ஞாயிற்றுக்கிழமை மாலையே திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணம் திரும்பினோம்.

''காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் அமைப்பாளர் சிலரின் 'துண்டு' மூலம் வேலைபெற்று, தேசிய அரசுப் பேரவையில் நான் கிளப்பிய ஆட்சேபனையினால் வேலைநீக்கம் செய்யப்பட்ட ஊழியர்கள் சிலர் நானும் மனைவியும் இல்லாத நேரத்தில் எனது தெல்லிப்பழை வீட்டுக்கு முன்னால் வந்து கூக்குரலிட்டதாகவும் அருகிலுள்ள வாலிபர்கள் யாரும் அங்கு வருமுன் அவர்கள் சைக்கிளில் தப்பியோடிவிட்டதாகவும் அறிந்தேன்.

''இச்சம்பவம் பற்றி எனது வீட்டிலிருந்த எமது உறவினர் பொலிசில் முறைப்பாடு செய்திருந்தார்.

''குறுக்கு வழியில் வேலை பெறமுற்பட்டவர்கள் அது தடைப்பட்டது கண்டு குமுறுவது ஆச்சரியமில்லை,

''பத்திரிகைச் செய்திகளைக் கண்ணுறுவோர், ஏதோ இலட்சிய வேகத்தில் இளைஞர்கள் இப்படி நடந்ததாக நினைக்கக் கூடாது என்பதற்காகவே இவ்விபரத்தை வெளியிடுகிறேன்"

## வரி விளம்பரம்

### தேவை

பிளூட் டிசைன் வெட்டுவதில் அனுபவமுள்ளவர்களும், வேலை பழகுபவர்களும் தேவை. விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும். ஐயா சச்சிதானந்தம், 222/1, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 8633

பகுதி நேரமாகக் கடமையாற்ற இளைப்பாறிய அப்போதிகரி ஒருவரும், முழு நேரம் கடமையாற்ற ஒரு மருந்துக் கலவையாளரும் உடனடியாகத் தேவை. விண்ணப்பிக்கவும். டாக்டர், வைத்திய நிலையம், ஆனைக்கோட்டை. 8630

எமது ஸ்தாபனத்திற்கு நம்பிக்கையும், அனுபவமுமுள்ள விற்பனையாளர்கள் தேவை. சமீபத்தில் பெற்றுக்கொண்ட தங்கள் பகுதி கிராம சேவகர் வேறும் இரு முக்கியஸ்தர்களினதும், கடைசியாகக் கல்வி பயின்ற பாடசாலை தலைமையாசிரியரின் நற்சான்றிதழ்களுடன் நேரில் வரவும். எஸ். சுப்பிரமணியம் அன் கோ 53, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 8638

### கல்வி

A/L 78,79 ஆண்டு பரீட்சைக்குரிய தாவரவியல், இரசாயனவியல், விலங்கியல், பௌதிகவியல் பாடங்கள் இன்று தொடக்கம் நடைபெறுகின்றன. ஆங்கிலம் விசேட பாடமாகக் கற்பிக்கப்படுகின்றது விபரங்களுக்கு; நேரில் வரவும். இல 77, அரசடி வீதி, யாழ்ப்பாணம். 8636

### விற்பனைக்கு

நீமியா உரம் மண்ணை வளம்படுத்தி அதிக விளைச்சலைக் கொடுக்கும். நீமியா உரப்பசளையை வாங்கி உபயோகியுங்கள். மில்க்வைற், யாழ்ப்பாணம். 8587

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## பிறந்ததின வாழ்த்து



சிவபாதசுந்தரம் சிவஜசந்தன்

சங்குவேலி தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்த சிவபாதசுந்தரம் இராஜேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன் சிவஜசந்தன் (ஜசந்தா) 1-3-1978 புதன்கிழமை (இன்று) தனது முதலாவது பிறந்தநாளை விமரிசையாகக் கொண்டாடுகிறார். அவரை அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மம்மா, அப்பப்பா, பெரியப்பா, பெரியம்மா, மாமாமார், மாமிமார், கணேஷ் சித்தப்பா, சிவாஜினி, கண்ணன், சிவதரன், கார்த்திகா, நந்தினி, சங்கர், ரவி மற்றும் உற்றார், உறவினர்கள் நாற்றுண்டுகாலம் நோய்நொடியின்றி வாழ வாழ்த்துகின்றனர். 8631

## சன்றைஸ் வெற்றி

[யாழ்ப்பாணம்]

மீலாத் விழாவை யொட்டி நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டியில் முதல் நாளன்று யாழ். நகர் முஸ்லிம் சன்றைஸ் விளையாட்டுக் கழகம் மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக்கழகத்தை 2—1கோல்கள் வித்தியாசத்தில் வெற்றி ஈட்டியது. சன்றைஸ் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த எம். மன்சூர், எம். எம். ஜுசுர் ஆகியோர் தலா ஒவ்வொரு கோல்களைப் போட்டனர்.

இரண்டாம் நாள் போட்டியில் சன்றைஸ் விளையாட்டுக் கழகம் நவாலி சென்பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகத்தை 3—2 கோல்கள் வித்தியாசத்தில் தோற்கடித்தது. சன்றைஸ் விளையாட்டுக்கழகத்தின் சார்பில் எம். எம் ஜுசுர் மூன்று கோல்களையும் போட்டார்.

இப்போட்டிகள் முஸ்லிம் வட்டார ஜின்னா மைதானத்தில் நடைபெற்றன. போட்டிக்கு எம். எம். முஸாதிக் மத்தியஸ்தம் வகித்தார். (சே)

## வடக்கு, கிழக்கின்
# சகல தொகுதிகளிலும் செந்தமிழர் இயக்கம்
## வி. பி. நடவடிக்கை

(பண்டத்தரிப்பு)

அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட செந்தமிழர் இயக்கத்தை வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள சகல தேர்தல் தொகுதிகளிலும் கிளைகளை அமைத்துச் சிறப்பாக இயங்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை அதன் பொதுச்செயலாளர் திரு வி. பொன்னம்பலம் மேற்கொண்டு வருகின்றார். எதிர்காலத்தில் மிகவும் பலம்வாய்ந்ததொரு அரசியல் இயக்கமாகச் செந்தமிழர் இயக்கத்தை மிளிரச்செய்வதற்கும் அவர் திட்டமிட்டுள்ளார்.

தமிழ்ப்பிரதேசத்தில் புதிதாக உதயமாகும் இந்தப் புதிய அரசியல் இயக்கத்திற்கு ஆதரவும், ஒத்துழைப்பும் தெரிவித்து அதன் உறுப்பினர்களாகச் சேர்ந்து பணியாற்றுவதற்குப் பல தமிழ் இளைஞர்கள் ஆர்வமுடன் முன்வந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மன்னார், வவனியா, முல்லைத்தீவு, அம்பாறை ஆகிய தேர்தல் தொகுதிகளில் தற்காலிக அமைப்பாளர்களாகக் கடமையாற்றுவதற்குப் பலர் முன்வந்திருப்பதாகவும் தெரிகின்றது. தற்போது உறுப்பினர்கள் சேர்வுப் படிவங்கள் தயாரிக்கப்பட்டு ஆங்காங்கு அனுப்பிவைக்கப்பட்டுவருகின்றன.

அடுத்த மாதத்தில் இந்த இயக்கத்தின் கிளைகள் சகல பட்டினங்களிலும் கிராமங்களிலும் அமைக்கும் வேலைகள் தீவிரப்படுத்தப்படுமெனவும் தெரியவருகின்றது.

## மட்டக்களப்பில் மீன் விற்பனைக்கிளை

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு பொதுச் சந்தையில் மீன்பிடிக்கூட்டுத்தாபனத்தின் மீன்விற்பனைக் கிளையொன்று விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது. இங்கு 2 ஆயிரம் அந்தர் மீன் பதனிடப்படுவதால் மேற்படி விற்பனைக் கிளையை திறுவுமாறு உணவு விநியோக மாநாட்டில் பட்டிருப்பு எம். பி. திரு. பூ. கணேசலிங்கம் கோரிக்கை விடுத்திருந்தது தெரிந்ததே. [அ]

## விஞ்ஞானகூட திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் - புத்தூர் மகாஜன வித்தியாலய விஞ்ஞான கூடத்திறப்புவிழா இன்று மாலை வித்தியாலய அதிபர் திரு. ம. முத்துலிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கிறது. கோப்பாய் எம் பி திரு சி கதிரவேலுப்பிள்ளை, வடமாநில கல்விப்பணிப்பாளர் திரு தி மாணிக்கவாசகர் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்வார்கள்.

திருவாளர்கள் வி தங்கராசா க பொன்னையா, பொ சிவகுரு உட்படப் பலர் உரையாற்றுவர்.

## 2-வது நினைவு தினம்



செல்வன் ஸ்ரீ பத்மநாதன்

எங்கள் இதயவானில் குளிர் தரும் நிலவே! உன் மறைவால் வாடித் தவிக்கும் உன் அப்பா, அம்மா, அண்ணன், அண்ணி, பிள்ளைகள் இன்று உனை நினைந்து அஞ்சலி செலுத்துகிறோம். இன்று செல்வன் நினைவாக புனித அந்தோனியார் ஆலயத்தில் தானம் வழங்கப்படும்.

மார்க்கண்டு, ஆனைக்கோட்டை. 8635

# மார்ச் முடிவுக்குள்
## 3 ஆயிரம் ஆசிரியர் நியமனம்

[கொழும்பு]

அடுத்த மாத முடிவுக்குள் 3 ஆயிரம் ஆசிரியர்கள் புதிதாக நியமிக்கப்படஉள்ளனர்.

இவர்களில் அநேகர், அனுராதபுரம், அம்பாறை, பொலநறுவ, அம்பாந்தோட்டை, மொனறாகலை ஆகிய இடங்களிலேயே நியமிக்கப்பட உள்ளனர்.

இந்த இடங்களில் விஞ்ஞான, கணித ஆங்கில ஆசிரியர்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதை அடுத்தே கல்வி அமைச்சு இந் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. (இ

## மின்சார பல்ப், டோர்ச் பட்டரி இறக்குமதி

(கொழும்பு)

5 லட்சம் மின்சார பல்புகளையும் 10 லட்சம் டோர்ச் 'ரான்சிஸ்டர்' பட்டரிகளையும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதிசெய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இப் பொருட்களுக்கு நாட்டில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை அடுத்தே கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் இந் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

500 கார் பட்டரிகளையும் 1009 லொறி பட்டரிகளையும் இறக்குமதிசெய்ய சி. டபிள்யு. ஈ. முடிவுசெய்துள்ளது.

பால்மாவையும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. [இ]

## யாருடையது?

யாழ் மலேயன் கபேயில் அதன் உரிமையாளரால் கண்டெடுக்கப்பட்ட கூப்பன் ஒன்றும் திறப்புக்கோர்வையொன்றும் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சிகாட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

## மருந்து தட்டுப்பாடு

[உடுப்பிட்டி]

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் மனநோயாளர்களுக்கான இன்றியமையாத மருந்துகளுக்குத் தட்டுப்பாடேற்பட்டுள்ளதால் நோயாளிகள் பெரிதும் கஷ்டமனுபவித்துவருகின்றனர். [அ]


**வேலாயுதம் மகா வித்தியாலயம்**
**பருத்தித்துறை**

க. பொ. த. உயர்தர வகுப்புகளில் பௌதிகம், தாவரவியல் கற்பிப்பதற்குப் பட்டதாரிகள் அல்லது அப்பாடங்களைக் கற்பிப்பதற்குத் தகைமையுடைய ஆசிரியர்கள் உடன் தேவைப்படுகின்றனர் 08-03-78க்கு முன் அதிபருக்கு விண்ணப்பிக்கவும். 8634

**சன் சயின் சோப்** இலங்கையில் எல்லாப் பாகங்களிலும் விற்பனையாகின்றது. இன்றே கேட்டு வாங்குங்கள். இது ஓர் லாலா தயாரிப்பு.

எமது கொழும்பு ஏக விநியோகஸ்தர் :
மகேஸ்வரி ஸ்டோர்ஸ்
நம். 226, கெய்சர் வீதி, கொழும்பு-11.

எமது சிலாபம் ஏக விநியோகஸ்தர் :
" பாமர "
மைக்குளம், சிலாபம்.

உற்பத்தியாளர் :
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி.

**யமஹா மீனவர்களை அழைக்கிறது !**

**8 H. P., 15 H. P.**
**மண்எண்ணெயில் இயங்கும் அவுட்போட் மோட்டர்கள்**

புதிய இறக்குமதி வந்து சேர்ந்துள்ளது
பேர்மிட் தேவையில்லை
ஏமாற்றத்தைத் தவிர்க்க உடன் பதிவு செய்யுங்கள்
அத்துடன்
**சகல உதிரிப்பாகங்களும் கையிருப்பிலிருந்து கிடைக்கும்**

தொடர்பு :
**கொன்சலிடேட்டட் என்ஜினியரிங் கம்பெனி**
**101, கியூ ரேட், கொழும்பு-2.**

தொலைபேசி : 35464 & 35009
தந்தி : கெரோமறின் 'KEROMARIN'
8637

ஈழநாடு
The Eelanaadu

# இந்திராவின் வெற்றி

இந்தியாவில் ஐந்து மாநிலங்களில் நடைபெற்ற தேர்தல் முடிவுகள் இன்னமும் சரியாக வந்துசேரவில்லை. ஆயினும் இதுவரை வந்த முடிவுகளிலிருந்து தென்னிந்திய மாநிலங்களில் திருமதி இந்திராகாந்திக்கு இன்னமும் செல்வாக்குக் குறையவில்லை என்பது தெளிவாகியிருக்கிறது. இதுமட்டுமல்ல திருமதி இந்திராவை அரசியலிலிருந்து ஒதுக்கித் தள்ளிவிட முடியாதென்பதையும் இந்திரா நிரூபித்திருக்கிறார்.

சுமார் ஒரு வருடத்துக்கு முன்னர் இந்தியாவில் நடந்த பொதுத் தேர்தலில் திருமதி இந்திரா தலைமையிலான காங்கிரஸ் கட்சி படுதோல்வியடைந்ததுடன் இந்திராவும் தனது தொகுதியில் தோல்வியடைந்தார். ஜனதாகட்சி பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சிக்குத் தெரிவு செய்யப்பட்டது.

ஆனாலும் அந்தத் தேர்தலில் கூட தென்மாநிலங்களில் இந்திராவின் காங்கிரஸ் கட்சியே பெரும்பாலான இடங்களில் வெற்றியீட்டியது.

வட மாநிலங்களில் ஜனதாவுக்குப் பெரும் பலம் கிடைத்தது. தென் மாநிலங்களில் அது பெருந்தோல்வியடைந்தது. இதற்கு ஜனதா கட்சியினர் விளக்கம் அளித்தபோது இந்திராவின் அவசர கால நிலையில் நடந்த அட்டூழியங்களால் தென் மாநிலத்தவர்கள் அதிகம் பாதிக்கப்படாததே காரணம் என்று கூறினர்.

இந்திராவின் ஆட்சிக் காலத்தில் நடந்த ஊழல் பற்றியும் கொடுமைகள் பற்றியும் இப்போது ஷா கமிஷன் முன் நடைபெறும் விசாரணைகளில் பலரும் கூறி வருகின்றனர். பத்திரிகைகள் இச்செய்திகளை முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரிக்கின்றன. வானொலியிலும் இது பற்றிய செய்திக்கே அதிக முக்கியத்துவம்.

இப்படியிருந்தும் இந்திரா தலைமையிலான புதிய காங்கிரஸுக்கு கர்நாடகத்திலும் ஆந்திராவிலும் பெரும் வெற்றி கிடைத்திருப்பதற்கு என்ன காரணம்?

ஜனதா கட்சி அரசாங்கம், கடந்த ஒரு வருட காலத்திலும் சீரான நிர்வாகத்தில் அக்கறை செலுத்துவதை விடுத்து, இந்திராவின் மதிப்பைக் குறைத்து, அரசிலிருந்தே அவரை ஒதுக்குவதில்தான் அதிகம் ஈடுபட்டுள்ளதென்ற அபிப்பிராயம், மக்கள் மனதில் ஏற்பட்டிருக்கவேண்டும்.

காங்கிரஸ் கட்சியைப் பிரித்துவிட்டார் என்று இந்திரா மீது சென்ற பொதுத் தேர்தல் சமயத்தில் காங்கிரஸ்காரர்கள் குற்றம் சுமத்தினர். இப்போது நடந்த மாநிலத் தேர்தலிலும் இதே குற்றச்சாட்டைச் சுமத்தினர். இந்திரா காங்கிரஸ், காமராஜர் காங்கிரஸ் என்பதெல்லாம் போய், இப்போது இந்திரா காங்கிரஸ், பிரம்மானந்தரெட்டி காங்கிரஸ் என்ற இரண்டு காங்கிரஸ்கள் இந்த மாநிலத் தேர்தலில் போட்டியிட்டன.

பிரம்மானந்தரெட்டி காங்கிரஸுக்குத்தான் தேர்தல் கமிஷனின் அங்கீகாரமும் கிடைத்தது.

ஆனாலும் பிரம்மானந்த ரெட்டியின் சொந்த மாநிலமான ஆந்திராவில்கூட, இந்திரா காங்கிரஸே ஆட்சிபீடத்திற்குத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறது.

இந்திராவின் துணிவும், தன்னம்பிக்கையும், நாட்டுப் பற்றும், சேவைமனப்பான்மையும், தியாகமும் அவரை மீண்டும் அரசியல் வானில் பிரகாசிக்கச்செய்யும் என்ற நம்பிக்கையைத் தோற்றுவித்திருக்கிறது.

இந்த மாநிலத் தேர்தல் இந்திராவின் வெற்றியே!

இதே சமயம், தமது தோல்வியை ஏற்றுக்கொண்டு, காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பதவியை திரு. பிரம்மானந்த ரெட்டி ராஜினாமாச் செய்திருப்பது ஜனநாயகத்தின் மீதும், மக்கள் தீர்ப்பின் மீதும் அவர் வைத்திருக்கும் மதிப்பை எடுத்துக்காட்டுகிறது. இது மட்டுமல்ல, பதவி பெரிதல்ல என்ற மனப்பான்மையையும் தெளிவாக்கியிருக்கிறது.

எப்படியானாலும், இந்தியாவில் ஜனநாயகம் நின்று செழிக்கும் என்பதையும் இந்த மாநிலத் தேர்தல்கள் எடுத்துக்காட்டுகின்றன.

## இந்தியக் கலைஞர்களின்

# வருகைக்குத் தடைவிதிக்க இவர்கள் யார்?

## நடிகர் டீன்குமார் கேட்கிறார்

''இலங்கை-இந்தியக் கூட்டுத் தயாரிப்பான 'பைலட் பிரேம்நாத்' திரைப்படம் சம்பந்தமாக இலங்கைக்கு வருகை தந்திருக்கும் தமிழ் நடிகர்களை வரவேண்டாம், அவர்களின் வருகையைத் தடைசெய்ய வேண்டுமென்று அறிக்கை விடும் கலைஞர் யார்?

''உலகின் பல பாகங்களிலிருந்தும் லண்டன், ஜெர்மனி, அமெரிக்கா ஏன் பாகிஸ்தானில் இருந்தும் கலைஞர்கள் இங்கு வரும்பொழுது அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்காதவர்கள், ஏன் தமிழ் நடிகர்கள் இங்கு வரும்பொழுது எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள்?''

இவ்வாறு நாடறிந்த நடிகரும், தமிழ்-சிங்களத் திரைப்படங்களில் முக்கிய பாத்திரங்களில் நடித்துவருபவருமான நடிகர் டீன்குமார், சினிமாஸ் ஷோப் திரைப்படமான 'தெய்வம் தந்த வீடு' திரைப்படப் பிடிப்புக்காக யாழ்ப்பாணம் வந்திருந்தபொழுது விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நடிகர் டீன்குமார் கூறியதாவது:

### அப்பொழுது ஏன் குரல் எழுப்பவில்லை?

''இலங்கை-இந்தியக் கூட்டுத் தயாரிப்பான 'பைலட் பிரேம்நாத்' திரைப்படம் சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் நடந்தபொழுது அதைப் பற்றிய செய்திகள் விபரமாக வெளிவந்தன. அப்பொழுது உரிமைக்குரல் எழுப்பாத கலைஞர்கள், இப்பொழுது நடிகர் திலகமும் ஏனைய கலைஞர்களும் இங்கு வருகை தந்தபின் கூச்சல் போடுவதும், அறிக்கை வெளியிடுவதும் ஏன்?

''தமிழ் நடிகர்களுக்குத் தமிழ் நடிகர்களே எதிர்ப்புத் தெரிவிப்பது விந்தைக்குரியது. நமது அண்டை நாடான இந்தியாவிலிருந்து இங்கு வந்திருக்கும் நமது சகோதரத் தமிழ்க் கலைஞர்கள், நாட்டால் வேறுபட்டிருந்தாலும் பேசும் மொழியால் பண்பாட்டால் கலாசாரத்தால் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளே

### அவர்கள் தவறல்ல

''பைலட் பிரேம்நாத்' சம்பந்தமாக நடிகர் திலகம் சிவாஜி கணேசனையோ அல்லது டைரக்டர் திருலோகசந்தரையோ குறைகூறவேண்டிய அவசியமில்லை. கூட்டுத் தயாரிப்பில் பங்குகொண்ட நம் நாட்டுத்தயாரிப்பாளர்களையே குறைகூறவேண்டும்.

''ஏனென்றால் அவர்கள் தான் இந்த நாட்டுக் கலைஞர்களைப் பற்றி, அவர்களின் திறமையைப் பற்றி இந்தியக் கலைஞர்களுக்கு எடுத்துச்சொல்லி இருக்கவேண்டும் அல்லது இதற்கு அனுமதி வழங்கிய திரைப்படக் கூட்டுத்தாபனம் அனுமதி வழங்கு முன் இந்தத் தயாரிப்புப் பற்றி, இதில் பங்குபற்றும் கலைஞர்களைப் பற்றிக் கேட்டிருக்கவேண்டும்.

''ஆனால் எல்லாம் நடந்து முடிந்தபின் இப்பொழுது நடிகர் திலகம் அவரது சக கலைஞர்களுடன் இங்கு வருகை தந்தபின் எதிர்ப்புக் குரல் எழுப்புவது, தங்கள் முகத்தில் தாங்களே சேற்றை வாரிப் பூசிக்கொண்டது போலாகும்

''மற்றும், நடிகர் திலகம் எனது படத்தில் நடிப்பாரா? நான் அவருக்குப் பணம் தருகிறேனென்று சவால் விடும் தயாரிப்பாளர், தான் எடுத்த இரண்டு திரைப்படங்களிலும் நடித்தவர்களுக்கு இன்னும் ஊதியம் வழங்கவில்லையே.

''போலிக் கலைஞர்களையும், தயாரிப்பாளர்களையும் முதலில் நம்மவர்கள் இனம்கண்டு கொள்ள வேண்டும். இனி எதிர்காலத்தில் உண்மையான கலைஞர்களுக்கு ஆதரவு தர வேண்டும்.''

# ''சிவாஜியுடன் நடிப்பதில் பெருமைப்படவேண்டும்''

இந்தியக் கலைஞர்களை எதிர்ப்பதால் இலங்கைக் கலைஞர்கள் வளரமுடியாது. இந்தியக் கலைஞர்களுடன் சிறுபாத்திரத்தில் நடிக்கமாட்டேன் என்று அறிக்கை விடுவது, பிறகு நல்ல பாத்திரம் கொடுத்தால் நடிப்பேன் என்று அறிக்கை வெளியிடும் கொள்கையில்லாத நடிகர்கள்தான் நம்மிடையேயிருக்கிறார்கள் என்று நாடகக் கலைஞரும் எழுத்தாளருமான திரு. அந்தனிஜீவா நமது நிருபரிடம் தெரிவித்தார்.

இந்தியாவின் தலைசிறந்த நடிகரான நடிகர் திலகம் சிவாஜிகணேசனுடன் நடிப்பதைப் பெருமையாகக் கொள்ளாமல் சிறுபாத்திரங்களில் நடிக்கமாட்டேன் என்று ஒரிரு படங்களில் நடித்த நடிகர்களே கூப்பாடு போடுகிறார்கள்.

''நாற்பதுவருடங்களாக நடிப்பு அனுபவமுள்ள நடிகர் திலகத்துடன் நாலு வருடம் கூட அனுபவம் இல்லாத இந்த நடிகர்கள் எதிர்ப்பு அறிக்கை விடுவது அழகில்லை.

''இப்பொழுதுநம்நாட்டுக்கு வருகை தந்திருக்கும் கலைஞர்களை வரவேற்று ஆதரவுதர வேண்டியது நமது கலைஞர்களின் கடமையாகும்'' என்று திரு. அந்தனிஜீவா சொன்னார். [அ]

# இந்தியாவில் அச்சாகும் அர்ச்சனை நூல்

(மாவிட்டபுரம்)

பிரம்ஸ்ரீ பி. பா. பஞ்சாட்சரக்குருக்களால் அச்சிட்டு வெளியிடப்பட்ட ''தியானாச் நாகதம்பம்'' என்னும் அர்ச்சனைகள் தியானங்களைக் கொண்ட கிரந்த மொழிப்புத்தகத்திற்குத் தமிழகத்தில் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளதையடுத்து அங்கு சென்று இதை அச்சிட்டு வெளியிடுவதற்காக குருக்கள் தமிழகம் பயணமாகியுள்ளார்.

சைவாலயங்களில் இடம் பெறும் பூசைகளின் போது இடம்பெற வேண்டிய அர்ச்சனைகள் தியானங்கள் போன்ற பல்வேறு விஷயங்கள் கொண்ட இந்நூலின் ஒருபகுதியை இலங்கைக்குக் கொண்டு வந்து விநியோகிக்க அவர் முன்வந்துள்ளார் (அ)

## மணிவாக்கு

மனிதன் தனக்கமைந்த கடமை எதுவென அறிவான். எனினும் தான் செய்யவேண்டுமென அறிந்ததைச் செய்கிறானில்லை. அது ஏன் அப்படி?

— காந்திமகான்.

# ஆண்டுவிழாவும் நாடகமும்

[யாழ்ப்பாணம்]

நல்லைஆதீன மங்கையர்க்கரசி மன்றத்தின் முதலாவது ஆண்டுவிழா எதிர்வரும் 3ம் திகதி வெள்ளிக்கிழமை ஆதீன கலாமண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

முத்தமிழ் வித்தகி செல்வி நல்லபிள்ளை நாகமுத்துவைத் தலைவியாகக் கொண்ட இவ்வாண்டு விழாவில் அவரால் தயாரிக்கப்பட்ட ''பாலருவாயரும் பாண்டிமாதேவியும்'' என்ற நடகாம் முக்கியஇடம் பெறும்.

இம்மன்றத்தின் உபதலைவியாக சி. பூபதியும், இணைச் செயலாளராக பாலநாகம்மா புனிதாதேவி ஆகியோரும் தனாதிகாரியாக ராகினியும் பணிபுரிகின்றனர். (அ)

# நூல்கள் அன்பளிப்பு

(உடுப்பிட்டி)

கரவெட்டியைச் சேர்ந்த திரு. எஸ். இராஜரத்தினம் என்பவர் நெல்லியடிப்பட்டினசபைப் பொதுநூல் நிலையத்திற்கு சுமார் 150 புத்தகங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். இப்புத்தகங்களை நூலகர் திரு எஸ். கனேசானந்தம் பொறுப்பேற்றுக் கொண்டார். (அ)

# இரும்புக்கம்பித் தட்டுப்பாடு

[உடுப்பிட்டி]

கட்டைவேலி — நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க இருப்புப் பொருட்கள் விற்பனவு நிலையத்தில் கடந்த ஒரு மாதகாலமாக இரும்புக்கம்பி இல்லாததினால் பாவனையாளர்கள் இரும்புக்கம்பி பெறுவதில் பெருங்கஷ்டமடைந்து வருகின்றனர். [அ]

# ''வீட்டில் அமைதியிருப்பின் மாணவர் ஒழுக்கம் ஓங்கும்''

[யாழ்ப்பாணம்]

''ஆசிரியர்களைத் தரம் கூடியவர், குறைந்தவர் என வகுக்கும் ஆற்றல் படைத்தவர்கள் மாணவர்களேயாவர். மாணவர்கள் தமது வகுப்பறையில் பாடங்களைக் கற்பதோடு நில்லாமல் ஆசிரியர்களையும் எடைபோட்டு விடுகின்றார்கள். எனவே ஆசிரியர்கள் பாடசாலையின் வகுப்பறைகளிலே தமது கடமைகளை மனப்பூர்வமாக மாணவர்கள் திருப்தியடையும்வரை நிறைவேற்றக் கடமைப்பட்டவர்களாவர்''

இவ்வாறு புலோலி வேலாயுதம் மகாவித்தியாலயத்தின் சிரேஷ்ட உதவியாசிரியரான திரு. எஸ் திபூசியஸ் தென் ஆபிரிக்கா நாட்டிற்கு ஆசிரியத் தொழிலை மேற்கொள்ளும் பொருட்டு, பாடசாலை ஆசிரியர்களாலும், மாணவர்களாலும் அளிக்கப்பட்ட பிரியாவிடை வைபவத்தின்போது, இலங்கைத் தேசிய ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்டக் காரியதரிசி திரு எம். குமாரசாமி குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசுகையில், ''ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் கல்வியையும், ஒழுக்கத்தையும் புகட்டவேண்டியவர்களே. ஆனால் மாணவர்களின் ஒழுக்கம் அவர்களின் வீட்டின் நிலைகளாலும், சமூக நிலைகளாலும் பெரிதும் பாதிக்கப்படுகின்றது. மாணவரிடையே காணப்படும் ஒழுக்கக் குறைபாட்டிற்கு அரசின் நிலையே பிரதான காரணமென்பதை அரசின் உயர்மட்டத்திலேயுள்ளவர்கள் மறந்துவிடுகின்றனர். இதனாலேயே மாணவர்கள் மத்தியில் நல்லொழுக்கத்தைப் புகட்டுமாறு ஆசிரியர்களுக்கு அறைகூவலும் விடுக்கப்படுகின்றது. வீடுகளிலே அமைதியும், சந்தோஷமும், அறிவுச் செறிவுமிருக்குமாயின் மாணவர்களிடையே நல்லொழுக்கம் தானாகவே தோன்றிவிடும். எனவே எமது இல்லங்களிலே அமைதியையும், சந்தோஷத்தையும் மாறி மாறி நாட்டில் பதவிக்கு வந்துள்ள அரசாங்கங்கள் வழங்கிவிட்டனவா என்றதுதான் இன்று மக்கள் முன்னுள்ள கேள்வியாகும். எந்த அரசாகிலும் இந்நிலையை சிருஷ்டிப்பார்களாயின் மக்கள் அந்த அரசை விரும்புவர்'' என்று கூறினார்.

# தமிழர்கூட்டணி நயினாதீவு தெற்குக்கிளை

[யாழ்ப்பாணம்]

நயினாதீவில் ஊர்காவற்றுறைப் பாராளுமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நயினாதீவு தெற்குக் கிளை நிறுவப்பட்டது.

இக்கிளைக்கு பின்வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. சி நா மதியாபரணம், உபதலைவர்: திரு கு சாந்தலிங்கம், செயலாளர்: திரு வ விக்கினேஸ்வரன், உபசெயலாளர்: திரு இ. கனகசபை, பொருளாளர்: திரு ச பரமேஸ்வரன், நிர்வாக உறுப்பினர்கள்: திரு அ நல்லையா, திரு க பரராசசிங்கம், திரு சி நா முத்தையா, திரு ஆ மு மார்க்கண்டு, திரு மா சின்னத்துரை, திரு க குமாரசாமி. இதனைத் தொடர்ந்து கருத்தரங்கும் இடம்பெற்றது. [இ]

# “நாகவிகாரை தமிழரால் தாக்கப்பட்டதாக வானொலி

# சகல பொலிஸ்நிலையங்களிலும் இச்செய்தி கேட்கக்

## கான்ஸ்டபிள் சட்டநாதபிள்ளை தொடர்ந்து சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

“நாகவிகாரையை தமிழ் மக்கள் தாக்கிவிட்டார்கள்” என்ற பொய்ச் செய்தியை, யாழ் பொலிஸ்நிலையத்திலிருந்து கொழும்புபொலிஸ் தலைமைக் காரியாலத்திற்கு அனுப்பினார்கள். இந்தப் பொய்ச் செய்தி நாட்டிலுள்ள சகல பொலிஸ்நிலையத்திற்கும் கேட்டிருக்கும்.

யாழ்ப்பாணம் புகையிரதநிலையத்தையும் தமிழர்கள் தாக்கப்போகிறார்கள் என்றும், வானொலித்தொடர்பு மூலம் கொழும்புக்கு அறிவிக்கப்பட்டது. இரண்டு மணிநேரத்தின்பின் இச் செய்தியில் உண்மையில்லை என்று பின்னர் அறிவிக்கப்பட்டது.

வானொலி மூலம் தகவல் கொடுத்தவரும் இப்பொழுது அம்பாறையில் கடமையாற்றுபவருமான கான்ஸ்டபிள் குமாரசாமியை சாட்சியமளிக்க அழைக்கும்படி சன்சோனி கமிஷன் உத்தரவிட்டார்.

மேலதிகாரிகளின் கட்டளையை அவர் இவ்வாறு பொய்யான தகவலை வானொலியில் அறிவித்தார் என்று சாட்சி சட்டநாதபிள்ளை கமிஷனிடம் தெரிவித்தார்.

சன்சோனி கமிஷன் முன் யாழ்ப்பாணம் பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ்கான்ஸ்டபிள் வேலுப்பிள்ளை சட்டநாதபிள்ளை நேற்று தொடர்ந்து சாட்சியமளித்தார்.

யாழ்ப்பாணம் பொதுநூலக கேட்போர் கூடத்தில் திரு. எம்: சி. சான்சோனி முன்னிலையில் நேற்று விசாரணை மீண்டும் ஆரம்பமானது.



### தன்னை மீண்டும் இடம் மாற்றிவிட்டனர்

திரு. சட்டநாதபிள்ளை, தன்னைப் பொலிஸ்நிலையத்தில் வேறு பிரிவுக்கு இடமாற்றம் செய்துவிட்டார்கள் என்றும் தெரிவித்தார்.

முதலில் தான் விசேட குற்றத் தடுப்புப் பிரிவில் கடமையாற்றியதாகவும். சன்சோனி கமிஷன் முன் சாட்சியமளிக்கப்போவதை அறிந்ததும், போக்குவரத்துப் பிரிவுக்கு மாற்றியதாகவும் 18ந் தேதி சாட்சியமளித்த பின் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் பிரிவுக்கு நேரடி மேற்பார்வையில் இடமாற்றம் செய்துள்ளதாகவும் கூறினார்.

கான்ஸ்டபிள் சட்டநாதபிள்ளை மேலும் கூறியதாவது:

யாழ். பொலிஸ் நிலைய வானொலி அறையிலிருந்து மேற்கூறிய பொய்ச் செய்தி கொழும்பு பொலிஸ் மத்திய தகவல் நிலையத்திற்கு அனுப்பப்பட்டது. வானொலி அறையில் இரவு பகல் எந்நேரமும் கடமையாற்றுவார்கள். கொழும்புக்கு மட்டுமன்றி எந்தப் பொலிஸ்நிலையத்திற்கும் நேரடியாகத் தகவல் அனுப்பலாம். கொழும்புக்கு வானொலி மூலம் செய்தி அனுப்பும்போது ஒரே நேரத்தில் மற்றப் பொலிஸ் நிலையங்களுக்கும் கிடைக்கும். றேடியோ மூலம் எல்லாப் பொலிஸ்நிலையங்களிலும் அச் செய்தியைக் கேட்கமுடியும். அனுராதபுரம் பொலிஸ்நிலையத்திலும் அதைக் கேட்கலாம். இப்பொய்ச் செய்தி 16ந் தேதி பகல் 10 மணிக்கு அனுப்பப்பட்டது.

### அதிபர் மூல[...] செய்தி அனுப்பலாம்

ஒரு செய்தி அனு[...] ஞல் பொலிஸ் அதி[...] தான் அனுப்பலாம். [...] மூலம் பொலிஸ் மா[...] உதவிப் பொலிஸ் அதி[...] செய்தி போகும்.

### மேலதிகாரிக[...] கட்டளைப்படி [...] செய்தார்

வானொலி அறையி[...] டபிள் குமாரசாமி [...] கடமையாற்றினார். [...] நிலையத்தில், பதிவுப் [...] உண்டு. அந்தப் புத்[...] செய்தியைப் பதி[...] பிரதி எடுத்து, [...] மூலம் அனுப்புவது [...] கான்ஸ்டபிள் குமார[...] செய்தியைப் பெரியவ[...] லித்தான் எழுதியனு[...] மேலதிகாரிகளின் [...] படிதான் அவர் [...] கான்ஸ்டபிள் குமார[...] போது அம்பாறை[...]

AUTOMOTIVE GROUP

எங்கள் தயாரிப்புகளும் சேவை[...]
ஒன்றிணைந்து உங்கள் வாகனங்[...]
அதிக நாட்கள் இயங்க உதவுகி[...]

LION

லையன் ஸ்பிரிங் பிளேட்ஸ்
ஸ்திரமாக இயங்குபவை.



உற்பத்தியாளர்கள் :
பாட்கோ மோட்டார் உதிரிப்பாகங்கள்
சிலோன் ஆட்டோமோட்டிவ் புறடக்ட்ஸ்

ஆட்டோ மோட்டிவ் நிறுவனத்தினதும், பாட்கோ மற்றும் லையன். ஆகியவற்றின் தயாரிப்புகள் உயர்தரத்திற்கேற்ப நீடித்துழைக்கும் வகையில் உற்பத்தி செய்யப்படுவதால், பலநாட்கள் உபயோகிக்கலாம். அதோடு எவ்வளவு தூரத்லிருந்தாலும் உங்களுக்குக் கிட்டும் வகையில் பல வியாபாரிகள் மூலம் வினியோகிக்கப்படுவதால், நீங்கள் எங்கு சென்றாலும் ஆட்டோ மோட்டிவ் தயாரிப்புகளுடன் செல்லுங்கள். அவை உங்கள் வாகனங்களை அதிக நாட்கள் இயங்கச் செய்கின்றன.

AUTOMOTIVE GROUP

வினியோகஸ்தர்கள் :
ஆட்டோமோட்டிவ் புறடக்ஸ் (சிலோன்) லிமிட்டெட்
217 பஞ்சிகாவத்தை றோட், கொழும்பு 10
தொலைபேசி : 35791

பாட்கோ மோ[...]
நீடித்துழைக்க[...]



உற்பத்தியாளர்கள் :
லையன் [...]
ஆட்டோ[...]

ZENITH

# றலிமூலம் பொய்த்தகவலை பொலிசார் அனுப்பினர்

## "..ட்கக்கூடியதாய் இருந்திருக்கும்"

பட்டது.

### ர் மூலமே தி ப்பலாம்

சய்தி அனுப்புவதா ாலிஸ் அதிபர் மூலம் னுப்பலாம். எஸ். பி. பாலிஸ் மா அதிபர், பொலிஸ் அதிபருக்கும் போகும்.

### திகாரிகள் ாப்படி தார்

லி அறையில் கான்ஸ் குமாரசாமி அன்று ாற்றினர். பொலிஸ் ல், பதிவுப் புத்தகம் அந்தப் புத்தகத்தில் பப் பதிந்துதான் ாடுத்து. வானொலி னுப்புவது வழக்கம். பிள் குமாரசாமி அச் பப் பெரியவர் சொல் எழுதியனுப்பினர். ரிகளின் கட்டளைப் அவர் செய்தார். பிள் குமாரசாமி இப் அம்பாறைக்கு இட

மாற்றம் செய்யப்பட்டுள்ளார்

நாகவிகாரை தாக்கப்பட்டதிலோ, ரயில்நிலையம் தாக்கப்பட்டதிலோ எந்தவித உண்மையும் இல்லை.

இரண்டு மணித்தியாலம் இச்செய்தி பொய்யென்று அவர்களே கொழும்புக்கு அறிவித்தார்கள். இது பற்றிச் சி ஐ டி. விசாரணை ஒன்று நடந்தது. கொழும்பிலிருந்து வந்து விசாரணை நடத்தினர். பின் இந்தச் செயலைக் குமாரசாமியின் தலையில் போட்டுவிட்டார்கள்.

### மாற்றலான கான்ஸ்டபிளுக்கு அழைப்பு

விசாரணை நடத்தியவர்கள், வானொலிப் பதிவு எல்லாவற்றையும் சீல்வைத்துவிட்டனர்.

சட்டத்தரணி: கான்ஸ்டபிள் குமாரசாமியை அழைக்கவேண்டும்.

கமிஷனர்: உடனடியாக வர ஏற்பாடு செய்யவேண்டும்.

அரச சட்டத்தரணி: அப்படியே செய்கிறேன்.

கமிஷனர்: இதே வானொலி மூலம் அவருக்குத் தகவல் அனுப்பலாம். (சிரிப்பு)

### மதிப்பைக் கெடுத்தேனும்

கான்ஸ்டபிள் சட்டநாதபிள்ளை: 18ந் தேதி நான் சாட்சியமளித்தபின் பொலிஸ் நிலையம் சென்றேன்.

தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் ரெனன் பெரேரா, "சாட்சியமளிப்பதானால் கொஞ்சம் சொல்லியிருக்கலாம். பொலிஸ் இரகசியம் முழுவதையும் வெளியில் செல்லிப் பொலிஸ் சேவையின் மதிப்பைக் கெடுத்துவிட்டீர்'' என்றார்.

நான் எந்தவித பொய்யும் சொல்லவில்லை. உண்மை எதுவோ அதனைச் சொன்னேன்'' என்றேன்.

"தமிழர் சிங்களவர், முஸ்லிம் ஆகிய மூன்று சமூகத்தவரும் இருக்கும் இலாகாவில் ஒரு சமூகம் மற்றச் சமூகத்திற்கு விரோதமாக நடந்தால் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டுமா? என்று அவரை நான் கேட்டேன்'' என்று கூறிய சட்டநாதபிள்ளை மேலும் கூறியதாவது:

திட்டமிட்டு ஒரு சமூகத்தவர், செயல்படும்போது உண்மைக்கு மதிப்பளிப்பவன், நீதியுள்ளவன் பொறுத்திருக்க முடியாது'' என்று அவருக்குக் கூறினேன்.

"நீதி நிலைக்கவேண்டும் அநீதி அழியவேண்டும் என்பதே எங்கள் குறிக்கோள் என்றேன்.

அடுத்தநாள் என்னை தன் நேரடிமேற்பார்வையின் கீழ்தன் பிரிவுக்கு மாற்றிவிட்டார்.

சட்டத்தரணி அண்டர்வூட் மணிவாசகர் கேட்ட கேள்விகளுக்குசாட்சி பதிலளித்தார்.

## சன்சோனி கமிஷன் விசாரணை:

தர். அதனால் எனக்குச் சொன்னார். நான் மேலதிகாரிகளுக்குப் புகார்செய்தேன். இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

சட்டத்தரணி சில்வா: 16ம் திகதி காலை அபாயமணி கேட்டதாகச் சொன்னீர்?- ஆம்.

சட்: பொலிசார் அங்கு சென்றார்களா?- ஆம்.

சட்: அப்போது அங்கு சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் யாராவது உரைநிகழ்த்தினார்களா?- ஏ. எஸ். பி. நூர்தீன் நின்றார்.

சட்: அவர் ஏதாவது சொன்னாரா?- ஒன்றும் சொல்லவில்லை. உடனடியாகப் போய் எல்லாரையும் சுட்டுப்போட்டு வாருங்கள் என்றார்.

சட்: தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் குணசேகரா நின்றார்?- நான் காணவில்லை.

சட்: அப்போது பொலிஸாருக்கு எந்தவித விளக்கமும் கொடுக்கவில்லை?- இல்லை.

சட்: குணசேகரா எப்போது வந்தார்?- சம்பவத்தின் பின் 11 மணிக்குவந்தார்

சட்: பொலிஸ் நிலையத்தில் நின்றாரா?- இல்லை.

### தகவல் புத்தகம்

சட்: பொலிஸார் அன்று துப்பாக்கிகளை எடுத்தபோது அதுபற்றிப்பதிவு இல்லை என்றீர்?- ஆம். பிரமாணப்படி நடக்கவில்லை.

சட்: பதிவு இல்லை என்று எப்படி உமக்குத் தெரியும்? இங்கு சாட்சியமளிக்குமுன் பதிவுப் புத்தகத்தைப்பார்த்தீரா?- நான் அந்த அறையிலேயே இருந்தேன்.

சட்: 16-ம் தேதி காலை 9-05 மணிக்கு தகவல் புத்தகத்தில், பதிவு எழுதப்பட்டுள்ளது. பதிவுப்பிரதியை சமர்ப்பிக்கிறேன்.

சட்டத்தரணி சாம் கதிர்காமர்: பதிவுமூலப்பிரதி சிங்களத்தில் இருக்கிறது. மொழிபெயர்ப்பு தேவை.

சட்: யாழ் பொலிஸ் நிலையத்தில், சப் இன்ஸ்பெக்டர் காரியவாசம் இருந்தாரா?- ஆம். அவர் இப்போது இல்லை.

சட்: எஸ். ஐ. பெரமுனே இருந்தாரா?- ஆகஸ்ட் மாதம் இருந்தார்.

சட்: பொதுத்தேர்தல் ஞாபகமிருக்கா?- ஆம்.

சட்: அடுத்த நாள் என்ன நடந்தது?- யாழ் மாநகர சபைக்கு முன் உள்ள சிலையை எடுத்துக் கீழே போட்டார்கள்.

சட்: யாருடைய சிலை?- கலாயோகி குமாரசாமி.

சட்: வேறு சம்பவம் தெரியுமா?- நகரில் பல சம்பவங்கள் நடந்தது.

### ஏ. எஸ். பி. சற்று யோசித்திருந்தால்

சட்டத்தரணி பார்லட்: எஸ். பி. நூர்தீன் வந்தபோது அபாயமணி அடிக்கப்பட்டது? -ஆம். அவர் 10 நிமிடம் யோசித்து நடந்திருந்தால் எந்தச் சம்பவமும் நடந்திராது.

சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம்: அரசாங்க அதிபர் காரியாலயத்திற்கு சொந்தமான ஜீப் 18ம் தேதி சம்பவத்திற்கு பாவிக்கப்பட்டதா?- ஆம் நம்பரும் தெரியும். அதன் நம்பர் 5 சிறி 1346.

சட்- இந்த ஜீப் வண்டி செம்மணித் துப்பாக்கிச்சூட்டு சம்பவத்திற்கு பாவிக்கப்பட்டது தெரியுமா?- தெரியாது.

சட்- சாரதி யார்? — கருணபாலா.

சட்- சிவன்கோவிலை நோக்கி பொலிசார் சுட்டனரா?- எரிகிற நெருப்பை அணைக்க ஒருவர்முயன்றுகொண்டிருந்தார். ஜீப்பைக் கண்டதும் ஓடியிருக்கிறார். அவர் ஆறுமுகம் வீட்டில் சுடப்பட்டார். பொலிசார் சிவன் கோவில் நோக்கியும் சுட்டதாகக் கேள்விப்பட்டேன்.

சட்: கிராமசேவகர்களிடம் புள்ளிவிபரம் திரட்டினர் என்று தெரியுமா?- தேர்தலுக்குமுன் என்னையும் கேட்டார்கள்.

கான். சட்டநாதபிள்ளை: 17ம் தேதி சம்பவம் பற்றி கட்டாயம் சொல்லவேண்டும்.

கமிஷனர்: என்ன சொல்லும்?- என்னுடன் சேவை செய்த கான்ஸ்டபிள்நடராசா காலை 6.30 மணிக்கு சிவில் உடையில் நாகவிகாரையால் வந்தார். அப்போது அங்கு கடமையாற்றிய பொலிசார் அவரைத் தாக்கினார்கள். அவர்கள் யூனிபோம் அணிந்திருந்தார்கள். நம்பர் இல்லை. அவர் எனக்கு வந்து முறைப்பாடு செய்தார்.

கமிஷனர்: அங்கு நீர் மாத்திரம் இருந்தீரா?- இல்லை. நான் சிரேஷ்ட உத்தியோகத்

ருடுநீவு போய்விட்டுவந்து பழைய மார்க்கட்டிற்குச் சென்று தீ மூட்டினார்கள்.

சட்: நீர் பதிவைப்பார்த்தீரா?- ஆம்.

சட்: எங்கு?- ரி. எம். ஓ. தகவல் புத்தகத்தில்.

சட்: யார் பதிவுபோட்டது? எஸ். ஐ வால்டர் பெரேரா.

சட்: இரவு 1-50 மணிக்கு பழைய மார்க்கட்டிற்கு தீவைத்ததாக கூறினீர்?- ஆம்.

சட்: அதனைக்கண்டீரா?- இல்லை.

சட்: கேள்விப்பட்டீரா- பொலிஸார் மண்ணெண்ணை ஸ்பிரே எடுத்துச்சென்றனர்.

சட்: நீர்பார்க்கவில்லை?- இல்லை.

சட்: டி. ஐ. ஜி. உகுப்பு நடத்தினார்?- ஆம்.

சட்: எதற்காகநடத்தினார்? எனக்கு தெரியாது. டி. ஐ ஜி. வகுப்புவைத்தால் எல்லாரும் போக வேண்டும்.

சட்: இதுவரை அவர் வகுப்பு வைத்த காரணம் தெரியாது? அவருடைய பிரிவிலுள்ள வடபகுதி பொலிஸ் நிலையங்களெங்கும் வகுப்பு நடத்தினார் எனக் கேள்விப்பட்டேன், எதற்கு என்று தெரியாது.

சட்: எஸ். பி. தர்மதாசாவைத் தெரியுமா?-ஆம் கலவர காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்தார்.

சட்: எவ்வளவு காலம்? ஒன்றரைமாதம்.

சட்: எங்கு கடமையாற்றினார்?-இணைப்பு அதிகாரி திரு. ருத்திரா ராஜசிங்கம்காரியாலயத்தில் கடமையாற்றினார். சிலநேரம் பொலிஸ் நிலையத்திலும், கடமையாற்றினார்.

சட்: சார்ஜன் குரே, தமிழ் பொலிஸாரை கொல்லவேண்டும் எனக் கூறியதாகச் சொன்னீர்?-ஆம்.

சட்: இதுபற்றிப் புகார் செய்யப்பட்டது?-ஆம்.

சட்: எப்போது?-21-ம் திகதி.

சட்: யார் புகார் செய்தது? -நாங்கள் 3 பேர் நின்றோம். நடேசன் புகார் செய்தார்.

சட்: எங்கு?-விசேட குற்ற தடுப்புப் பிரிவுப் புத்தகத்தில்.

சட்: பி. இ. ரணசிங்கா

### —நமது அலுவலக நிருபர் கா. யோகநாதன்—

தகவல் புத்தகமூலப் பிரதி தொடர்பாக, அங்கு சமூகமளித்திருந்த பொலிஸ் உத்தியோகத்தருக்கு தெரிவிக்கப்பட்டது.

கமிஷன் கட்டளையின்பேரில் எஸ். ஐ. கருணதிலகா, சார்ஜன்ட் வீரசிங்கம், பொலிஸ் நிலையத்திலிருந்து விசாரணை தொடர்பான தகவல் புத்தகங்களைக்கொண்டுவந்திருந்தனர். தகவல் புத்தகத்தில், வெளியில் சென்ற திரும்பிவந்த தகவல் எழுதப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

சட்டத்தரணி பார்லட்: பதிவு எழுதியவரும் அழைக்கப்படவேண்டும்.

சட்டத்தரணி சில்வா: வெளியே போனதுபற்றிய பதிவு எழுதியவர் பெயர் இல்லை. இலக்கம் மட்டும் உண்டு. திரும்பி வந்தது பற்றி இன்ஸ்பெக்டர் ராமநாயக்கா எஸ். ஐ. மெண்டிஸ், எஸ். ஐ. கான் எழுதியுள்ளனர்.

சட். சில்வா: 16-ம் தேதி தமிழ்ப் பொலிஸாருக்குத் துவக்கு கொடுக்கப்படவில்லை என்றீர்?- ஆம்.

சட்: அப்படிக் கொடுக்கூடாதென யாரும் கட்டளையிட்டனரா?- இல்லை.

சட்: பொலிஸ் அதிபர் வீட்டில் 15 ம் தேதி கூட்டம் நடந்ததாக சொன்னீர்?-ஆம்.

சட்: நீர் போகவில்லை?- இல்லை. நம்பிக்கையான ஆட்களிடம் அறிந்தேன்.

சட்: கூட்டத்தின்பின் புங்குடுதீவு போவதாகப்பதிவு எழுதியதாக சொன்னீர்?- ஆம். பதிவு எழுதிவிட்டு புங்

வைத் தெரியுமா?-ஆம்.

சட்: அவரின் நம்பர் தெரியுமா?-இல்லை. ஆளைக்கண்டால் காட்டுவேன்.

சட்: ஒரு ரணசிங்காவை தெரியுமா?-வேறு ரணசிங்காவையும் தெரியும்.

கமிஷன்: அவர் ஒருவர்தானஅங்கு ரணசிங்கா?-வேறு பேரும் இருந்தார்கள்.

கமிஷன்: அந்த நேரத்தில் யாழ். பொலிஸ் நிலையத்தில் வேறு ரணசிங்காவும் இருந்தார்களா?-ஆம்.

சட். சில்வா: ஆயுதம் தாங்கி கடமையாற்ற பொறுப்பான உத்தியோகத்தர் தெரிந்தெடுக்கப்படுவரா?-ஆம்.

சட்: பொறுப்பு வாய்ந்தவர் என்றால் என்ன?-எல்லாவற்றையும் பொறுப்புடன் செய்பவர் எல்லோரையும் அப்படிச் சொல்ல முடியாது.

சட்: அப்படிச் சொல்ல முடியாது யார் பொறுப்பில்லாதவர்?- "றெக்குருட்" கான்ஸ்டபிள் பொறுப்பில்லாதவர்கள். கடமைக்கு அனுப்பும்போது ஒரு சிரேஷ்ட அதிகாரியையும் அனுப்புவார்கள்.

சட்: பொறுப்புணர்ச்சி என்றாலென்ன?-எந்த சம்பவத்தின் போதும், சிந்தித்துச்செயலாற்றுவர்.

சட். கதிர்காமர்: பதிவுப்புத்தகத்தின் மூலம் வேண்டும்.

கமிஷனர்: மூலப்பிரதி இங்கே இருக்கா?

சட் சில்வா: ஆம். பொலிசார் கொண்டு வந்திருக்கிறார்

(8 ம் பக்கம் பார்க்க)


..வையும் ..ங்களை ..புகின்றன

..artco

..கா மோட்டார் உதிரிப்பாகங்கள் ..துழைக்க தயாரிக்கப்படுபவை.



..ளர்கள் :

லையன் ஸ்பிறிங் பிளேட்ஸ்
ஆட்டோ மோட்டிவ் ஸ்பிறிங்ஸ் லிமிட்டெட்

# இந்திரா காங்கிரஸுக்கு ஆந்திராவிலும் அறுதிப் பெரும்பான்மை

## வெள்ளியன்று முதல்வர் தெரிவு

ஹைதராபாத், பெப் 28 ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் திருமதி இந்திரா காந்தியின் காங்கிரஸ்கட்சி அறுதிப் பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுள்ளது.

294 தொகுதிகளைக் கொண்ட இம்மாநிலத்தில் இந்திரா காங்கிரஸ் 175 இடங்களைக் கைப்பற்றியுள்ளது.

ஜனதா கட்சி 60 ஸ்தானங்களைக் கைப்பற்றி இரண்டாவது இடத்தையும், ரெட்டி காங்கிரஸ் 30 இடங்களைப் பெற்று மூன்றாவது இடத்தையும் வகிக்கின்றன.

ஒரு தொகுதியில் வாக்குகள் மீண்டும் எண்ணப்படுகின்றன

இம்மாநில சட்டசபைக்குத் தெரிவுசெய்யப்பட்ட இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஹைதராபாத்தில் கூடி, தமது புதிய தலைவரைத் தெரிவு செய்வரென்று இந்திரா காங்கிரஸ் தலைமைப்பீடம் அறிவித்துள்ளது. (இ)

# தேவராஜ் அர்ஸ்

## கர்நாடக முதல்வரானார்

பெங்களூர், பெப். 28 கர்நாடக மாநிலத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பெற்ற இந்திரா காங்கிரஸ் கட்சியின் சட்டசபைத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட திரு. தேவராஜ் அர்ஸ் இன்று முதல் அமைச்சராகப் பதவியேற்றுள்ளார்.

63 வயதான திரு. அர்ஸ் திருமதி இந்திரா காந்தி பதவியிலிருந்தபோது, 70 மாதங்கள் கர்நாடக மாநில முதல்வராக இருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது.

கர்நாடக மாநிலத்தில் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் நேற்று பெங்களூரில் கூடியபோது சட்டசபைத் தலைவராக திரு. தேவராஜ் அர்ஸ் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

திரு தேவராஜ் அர்ஸ் மீது ஜனதா கட்சி அரசு, ஊழல் குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டது வாசகர்கள் அறிந்ததே. (இ)

# இஸ்ரேல்- எகிப்து பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகும்

## பெகின் நம்பிக்கை

ஜெருஸலம், பெப் 28 மத்தியகிழக்கு சமாதானம் குறித்து எகிப்து-இஸ்ரேல் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பமாகும் சாத்தியக் கூறுகள் தோன்றியுள்ளன என்று இஸ்ரேலியப் பிரதமர் திரு. பெகின் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

தம்மைச் சந்தித்த பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் திரு. ஓவனிடமும், அமெரிக்கத் தூதுவர் திரு அதேட்டனிடமுமே திரு. பெகின் இந்த நம்பிக்கையைத் தெரிவித்தார்.

இவர்கள் இருவருடனும் நடத்திய பேச்சுவார்த்தையின் பின்னர் இந்த நம்பிக்கை மேலும் வலுப்பெற்றுள்ளது என்றும் திரு. பெகின் கூறினார்.

இதேவேளையில், மீண்டும் எகிப்து-இஸ்ரேல் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு எகிப்திய அதிபர் ஜனாப் அன்வர் சதாத் விதித்துள்ள நிபந்தனைகளுக்கு இஸ்ரேலிய அதிபர் திரு. பெகின் பதில் அனுப்பியுள்ளார். (இ)

### அமெரிக்கரின் விருப்பம்

நியூயோர்க், பெப். 28 மத்திய கிழக்கு நாடுகளுக்கு அமெரிக்கா ஆயுத விநியோகம் செய்வதை அமெரிக்க மக்கள் விரும்பவில்லையென்று தெரிகிறது.

அண்மையில் நியூயோர்க் மக்களிடையே எடுத்த அபிப்பிராய வாக்கெடுப்பின் மூலம் இது தெரியவந்துள்ளதென்று அமெரிக்கச் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ)

......

### யார் இவர்?

[மாங்குளம்]

இடதுகையில் நாகபாம்பு, நடனமாடும் பெண் ஆகியவற்றையும் இடது காலில் கிறிஸ்தத்தியையும் பச்சைகுத்தியுள்ள 40 வயது மதிக்கத்தக்க ஒருவர் புளியங்குளம் ரயில் நிலையத்தில் ரயில் பாதைக்கு அருகே இறந்து கிடக்கக்காணப்பட்டார்.

இனந்தெரியாத இவரை ரயில் மோதியிருக்கலாம் என பொலிசார் கருதுகின்றனர். (இ)

# சங்கச் செய்திகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்கல்வித்திணைக்கள தமிழ் இலக்கிய மன்ற நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டவர்கள்:

போஷகர்: திரு ரீ மாணிக்கவாசகர் (கல்வித்திணைக்களப் பணிப்பாளர்), தலைவர்: திரு அ சி நல்லையா (கல்வி அதிகாரி). உபதலைவர் திரு ச திருநாவுக்கரசு [கணக்காளர்], செயலாளர் திரு செல்லையா மெற்ருஸ் மயில், உபசெயலாளர் திரு கு ந இராசநாயகம், பொருளாளர் திரு சு வெற்றிவேலாயுதம், உபபொருளாளர் திரு பூ புலேந்திரராசா.

### திருப்பணிச்சபை

(யாழ்ப்பாணம்)

இணுவில் ஸ்ரீபரராசசேகரப் பிள்ளையார் கோவிலின் புதிய திருப்பணிச்சபைத் தெரிவு நடைபெற்றது. இவர்கள் அனைவரும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பெற்றனர்.

தலைவர் ஆ சுந்தரம், உபதலைவர் அ இராசநாயகம், காரியதரிசி செ இரத்தினப்பிரகாசம், உபகாரியதரிசி க கதிரவேல், தனாதிகாரி க சுப்பையா, உபதனாதிகாரி த தருமலிங்கம்.

இவர்களுடன் இன்னும் 3 பேர் நிர்வாகசபைக்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

தி சண்முகராசா, கா கந்தையா, க துரைராசா.

### பெ. ஆ. சங்கம்

(கரணவாய்)

பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாசாலை பெற்றார் ஆசிரியர் சங்க நிர்வாகிகள்:

தலைவர் வே ந பாலசுந்தரம், உபதலைவர் த நமசிவாயம், செயலாளர் ந சிவசுப்பிரமணியம், உபசெயலாளர் ப பாலகிருஷ்ணன், பொருளாளர் திருமதி வேலும்மயிலும்.

6 பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது

### ப நோ. கூ. சங்கம்

[வட்டுக்கோட்டை]

காரைநகர் பலநோக்குக்கூட்டுறவுச்சங்க இயக்குநர்சபைத் தலைவராக திரு க அருணாசலம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் இயக்குநர்சபை உறுப்பினர்கள்: ச கதிரவேலு, சி சிவமணி, க சோமசேகரம், சி சின்னத்துரை, செ கிருஷ்ணர், செ இராமநாதன், மு நாகலிங்கம்.

### சங்கானை ச. ச. நி.

(பண்டத்தரிப்பு)

சங்கானை மேற்கு சனசமூக நிலைய நிர்வாகிகள்:

தலைவர் க கேசவரத்தினம், உபதலைவர் க இராசேந்திரம், செயலாளர் தி சிவானந்தன், உபசெயலாளர் இ இரத்தினசிங்கம், தனாதிகாரி கா இந்திரகுமார், பத்திராதிபர் தே பாலச்சந்திரன்.

நிர்வாகசபை உறுப்பினர்கள்: கோ பாலச்சந்திரன், செ விமலேந்திரன், ஆ தனபாலசிங்கம். வி சந்திரலிங்கம்.

### கலைமணி ச. ச. நி:

(யாழ்ப்பாணம்)

கட்டப்பிராய் கலைமணி சனசமூகநிலைய நிர்வாகிகள்:

போஷகர் ச பாலசிங்கம், தலைவர் அ கனகலிங்கம், உபதலைவர் சோ தர்மகுலேந்திரன், காரியதரிசி இ குலநாயகம், உபகாரியதரிசி க சண்முகநாதன், பொருளாளர் இ நாகேஸ்வரன், உபபொருளாளர் ந சிவகுமரன், விளையாட்டுக்காரியதரிசி ஐ பரமானந்தம், நிர்வாகசபை உறுப்பினர்கள் எட்டுப் பேர்.

### கொக்குவில்

### கி மு. ச.

[யாழ்ப்பாணம்]

கொக்குவில் மேற்கு கிராம முன்னேற்றச்சங்க உறுப்பினர்கள்:

காப்பாளர்: நல்லூர் எம் பி திரு மு சிவசிதம்பரம், சட்டத்தரணி பொ நவரட்ணம், தலைவர் கா பாலசுப்பிரமணி

[7ம் பக்கம் பார்க்க]

### கட்சி நிலவரம்

**கர்நாடகம்**

மொத்த ஆசனங்கள்-224

| | |
|---|---|
| இந்திரா காங்கிரஸ் | -150 |
| ஜனதா | - 59 |
| காங்கிரஸ் | - 02 |
| ஏனையவை | - 12 |

**ஆந்திரா**

மத்த ஆசனங்கள்-294

| | |
|---|---|
| இந்திரா காங்கிரஸ் | -175 |
| ஜனதா | - 60 |
| காங்கிரஸ் | - 30 |
| சுயேச்சை | - 12 |
| ஏனையவை | - 16 |

# இன்று முதல் இவர்கள் வேலைநிறுத்தம் செய்வராம்

[மாவிட்டபுரம்]

தெல்லிப்பழை தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் தமது 22 கோரிக்கைகளை முன்வைத்து இன்று முதல் வேலை நிறுத்தத்தில் குதிக்கின்றனர்.

சங்க ஊழியர்கள் இருவரைக் காரணம் எதுவுமின்றி தற்காலிக வேலை நீக்கம் செய்தமை, ஒருவரை வேலை நீக்கம் செய்தமை இது குறித்து விசாரணை நடத்துமாறு விடுத்த கோரிக்கையை அசட்டை செய்தமை போன்ற காரணங்கள் சிலவற்றை முன்வைத்து இவ் வேலை நிறுத்தத்தில் அவர்கள் குதிக்கிறார்களாம்.

மேற்படி தெங்கு-பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவு ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த 15 கிளைகளில் உள்ள சுமார் 50க்கு மேற்பட்டோர் இவ்வேலை நிறுத்தத்தில் குதிப்பார்களாம்.

தமது பிரச்னைகள் கோரிக்கைகள்பற்றிப் பல தடவை நிர்வாகத்துடனும், உயர் அதிகாரிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தியும் பயன் எதுவும் கிடைக்காமையினாலேயே வேலை நிறுத்தத்தில் குதிப்பதாகவும் எமது பிரச்னைகள் தீரும்வரை வேலை நிறுத்தம் நீடிக்குமெனவும் மேற்படி சங்கச் செயலாளர் திரு. சி. ஞானம் அறிவித்துள்ளார்.

வேலை நீக்கம் செய்யப்பட்ட ஊழியரை மீண்டும் வேலைக்குச் சேர்த்துக்கொள்ளவேண்டும்; தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களை விசாரணை செய்து மீண்டும் வேலைக்குச் சேர்த்துக்கொள்ளவேண்டும். 8 மணி நேர வேலை வழங்குவதுடன் மேலதிக வேலை செய்தால் மேலதிக நேர வேலைக்கான சம்பளம் வழங்கப்படல்வேண்டும்; அடிப்படைச் சம்பளம் 180 ரூபாவாக இருக்கவேண்டும் கடமை நேர விபத்து நஷ்டஈடு 10 ஆயிரம் ரூபாவாக இருக்கவேண்டும் என்பன போன்ற 22 கோரிக்கைகளை இவர்கள் முன்வைத்துள்ளனர். [அ]


# பிளனவின் மலையளவு நலன்

பிளனாவினுக்குச் செலவாகும் சிறுதொகை மலையளவு நலனளிக்கிறது




பயிர் முளைத்து அறுவடை செய்யப்படும் வரை களைகளின் தொல்லையைத் தவிர்க்க ஏக்கருக்கு முதல் 1½ இருத்தல் வரையான பிளனவின் போதுமானது. களைகள் முளைப்பதற்கு முன்னரே அவற்றைத் தெரிந்து கொல்லக் கூடியது. மிளகாய், வெங்காயம், சோயா அவரை, புகையிலை, முதலிய பயிர்களுடன் தோன்றும் எல்லாக் களைகளையும கட்டுப்படுத்த உன்னதமானது.

மேலும் விபரங்களுக்கு: 'லங்கெம்' உடன் தொடர்பு கொள்ளுங்கள் அல்லது எழுதுங்கள்.

LANKEM

நாளைய நிறைவை நோக்கி

GRANT K & E 538

**Regal** Jaffna Daily 4-45, 7-00 & 9-30 p.m.

MICHAEL CAINE
in
**The Romantic English Woman**
(Color)
(வயது வந்தவர்களுக்கு மட்டும்-Adults only)

**Rio** (Jaffna) Daily 4 shows
Phone: 7607 Now Showing
COW BOY THRILLER
**RAMON THE MEXICAN**

**ராஜா** தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
[யாழ்ப்பாணம்]
ஜெய்சங்கர்-கே. ஆர். விஜயா-சோ-விஜயகுமார்
நடித்த
**மேயர் மீனாட்சி**

**ராணி** தினசரி 4 காட்சிகள்
[யாழ். நகர்] வி. பி. கணேஷன் — சுபாஷினி
நடித்த
**நான் உங்கள் தோழன்**
3-3-78 முதல் குதூகல ஆரம்பம்
ஜெய்சங்கர்—ஜெய்சித்திரா நடித்த
**பணக்காரப் பெண்**

**ஸ்ரீதர்** தினசரி 4 காட்சிகள் (யாழ்ப்பாணம்) 72-வது தினம்
அனைவரின் வேண்டுகோளுக்கிணங்க
**இன்ஸ்பெக்டர் மனைவி**
3-3-78 முதல் ஜெமினி, பத்மினி, ராதா நடித்த **சித்தி**

**மனோஹரா** (யாழ் நகர்) தினசரி 4 காட்சிகள்
எஸ். எஸ். ஆர். - மைனாவதி
**குலதெய்வம்**
(புதிய பிரதி)
3-3-78 முதல்
**ஊருக்கு உழைப்பவன்**

**சாந்தி** (யாழ். நகர்) போன்: 7642
தினசரி 10-30, 2-30,6-30, 9 45
பஷிராஜாவின்
**மரகதம்** சிவாஜி - பத்மினி நடித்த
(புதிய பிரதி)
28-2-78 நிதியுதவிக்காட்சி ''மருதநாட்டு வீரன்'' ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மறு அறிவித்தல் இங்கு வெளியாகும். இதற்கான அனுமதிச்சீட்டுகள் அப்போது செல்லுபடியாகும்.

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
நாகேஷ் நடித்த
**எங்களுக்கும் காலம் வரும்**

கொட்டகை நிறைந்த காட்சியுடன் நடைபெறுகிறது
**லிடோ** போன் 7693
(யாழ். நகர்) முத்துராமன், சிவகுமார், சுஜாதா
நடித்த
**உறவு சொல்ல ஒருவன்**

கடைசி வாரம்
**வின்ஸர்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
☆ கமலஹாசன் ☆ ரஜனிகாந்த்
☆ எம்.எஸ்.விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஒய். விஜயா
**மூன்று முடிச்சு**
திரை கதை வசனம், டைரக்ஷன்: கே. பாலசந்தர்


வேலணை ஏழுபேர் கொலை வழக்கு:

# ''பத்துப் பேரைச்சுட்டாச்சு என்று எதிரி சொன்னார்''

## பேக்கரி உரிமையாளர் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

''சம்பவ தினம் பகல் 10-30 மணியளவில் நான் எனது பேக்கரியில் நின்றபோது எதிரி இரண்டு பார்சல்களுடன் வந்தார் அதில்உமல்பையில் இருந்த தோட்டாக்களைக் காட்டிய அவர்பத்துப்பேரைச்சுட்டாச்சு என்று என்னிடம் சொன்னார்.''

இவ்வாறு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் நேற்றுத் தொடர்ந்து நடைபெற்ற வேலணை ஏழு பேர் கொலை வழக்கு விசாரணையில் நாகரத்தினம் பாலச்சந்திரன் (வயது 29) என்ற பேக்கரி உரிமையாளர் சாட்சியமளிக்கையில் கூறினார்.

### பத்துப் பேரைச் சுட்டாச்சு

அவர் தமது சாட்சியத்தில் தொடர்ந்து சொன்னதாவது:

''எதிரியை முன்னரே எனக்குத் தெரியும். சம்பவ தினம் சம்பவம் நடைபெற்ற இடமான சாட்டிப் பகுதியிலிருந்து வந்த அவர் என்னிடம் 2 ரூபா சில்லறை தருமாறு கேட்டார்.

''சில்லறை இல்லை என்று கூறி, பத்துரூபா நோட்டு ஒன்றை அவரிடம் கொடுத்தேன். தம்முடன், தாம் செல்லும் இடம் வரை என்னை வருமாறு கேட்டார். நானும் அவருடன் சென்றேன்.''

இக்கட்டத்தில் நீதிபதி: ஏன் அவருடன் சென்றீர்?

சாட்சி: எதிரி மீது ஏற்பட்ட அச்சமே, அவர் கூப்பிட்டவுடன் அவருடன் நான் செல்லச் சம்மதிக்கச் செய்தது.

''எதிரி கொண்டுவந்த மற்றப் பார்சல் மூன்றடி நீளமானது'' என்று தொடர்ந்து அவர் சாட்சியமளிக்கையில் சொன்னார்.

''அந்த நீளமான பார்சலை எதிரி தோளில் வைத்துக் கொண்டு வந்தார்'' என்றும் சாட்சி நீதிபதியை நோக்கிச் சொன்னார்.

அரச சட்டத்தரணி திரு. கனகரத்தினத்தின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் 'குறிப்பிட்ட பத்து ரூபாவைத் திரும்பத் தருவதாகக் கூறியே எதிரி பெற்றுச்சென்றார். சம்பவம் பற்றி அன்று காலையே நான் கேள்வியுற்றிருந்தேன். அதனால் எதிரி தாமே அது பற்றிக் கூறியதும் அச்சம் உண்டாயிற்று'' என்றும் கூறினார்.

எதிரி தரப்புச் சட்டத்தரணி சிவசிதம்பரம்; சம்பவம் பற்றி அதாவது எதிரி உம்மிடம் கூறியது பற்றி பொலிசுக்கு அல்லது கிராமசேவகருக்கு உடன் தகவல் கொடுத்தீரா?

சாட்சி: இல்லை.

சிவா: சம்பவம் நடந்ததற்கு மறுநாள்தான் பொலிசுக்கு வாக்குமூலம் அளித்தீர்?

சாட்சி: ஆம்

சிவா: அதுவும் பொலிசார் உம்மிடம் வந்து தான் வாக்குமூலம் பெற்றனர்.

சாட்சி: ஆம்

சிவா: பொலிசார் உம்மிடம் வராவிட்டால் வாக்குமூலம் அளிக்க வேண்டும் என்று உமக்குத் தோன்றியிருக்காது.

சாட்சி: ஆம்

சிவா: சம்பவ தினம் பொலிசாரை நீர் அப்பகுதியில் பல தடவைகள் காண நேர்ந்துள்ளது. எனினும் வாக்குமூலம் அன்று அளிக்கவில்லை.

சாட்சி: ஆம்

### நீளப்பார்சலுடன் கள்ளருந்த வந்தார்

செல்லையா சுப்பிரமணியம் என்ற கள்ளு விற்பனை நிலைய லிகிதர் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

''சம்பவ தினத்தன்று காலை 10 மணியளவில் எதிரி நான் கடமை செய்த கள்ளுத்தவறணைக்கு வந்தார். பத்து ரூபா தந்து கள்ளருந்திய பின் மிகுதிப் பணத்தைப் பெற்றுச் சென்றார். தனியே நடந்து வந்த அவரிடம் நாலடி நீள பார்சல் ஒன்றிருந்தது. சாக்கில் சுற்றப்பட்ட அப் பார்சலை அவர் சாத்திவைத்தார்

எதிரிதரப்புச் சட்டத்தரணி திரு. சிவசிதம்பரம் குறுக்கு விசாரணைசெய்கையில் கள்ளுத்தவறணைக்கு பலர் வருவார்கள் அப்படித்தானே? என்றார்.

சாட்சி 'ஆம்' என்று பதிலளித்தார்.

நீதிபதியின் கேள்விஒன்றுக்கு சாட்சி பதிலளிக்கையில் எதிரி வெள்ளைச்சாரமும் ஷேர்ட்டும் அணிந்திருந்தார் என்றார்

### காலை 6-30க்கு கேட்ட வெடிச்சத்தம்

சொக்கலிங்கம் கதிரேசு என்ற விவசாயி சாட்சியமளிக்கையில் சொன்னதாவது:

''சம்பவதினம் நான் காலை 6-30 மணியளவில் தேநீர் அருந்திக் கொண்டிருக்கையில் வீட்டில் வெடிச்சத்தம்கேட்டது அவ்விடம்நோக்கி ஓடினேன் வழியிலும் வெடிச்சத்தங்கள் கேட்டன. அவ் வீட்டுப்படலையடிக்குச் செல்கையில் வெடிச் சத்தம் நின்றுவிட்டது.

வெடிச்சத்தம் கேட்டபோது இராசரத்தினம்வீட்டில்குழறிக் கேட்டது. அது ஒரு பெண் குரல்.

### ''சுந்தரலிங்கம் சுடுறான்''

சுந்தரலிங்கம் சுடுறான், சுடுறான், என்ற அலறல் ஓசையும் அவ்வேளையில் எனக்குக் கேட்டது.

இராஜரத்தினம் கீழே விழுந்து கிடந்தார். மேலும் நால்வரும் சூடுபட்டு கீழே விழுந்து கிடந்தனர்.

இராஜரத்தினம் ஓரளவு சுயநினைவுடன் பேசக்கூடிய நிலையில் இருந்தார்.

சம்பவம்பற்றி பொலிசுக்குச் சொல்லி அவர்களைக் கூட்டி வந்தேன்.

எதிரிதரப்புச் சட்டத்தரணி திரு. சிவசிதம்பரம் குறுக்கு விசாரணை செய்தார்.

சிவா: எதிரியின் மனைவியை உமக்குத் தெரியுமா?

சாட்சி: தெரியும்,

சிவா: தியாகராஜாவும், இராஜரத்தினமும் அவரைத் தாக்கியது தெரியாது.

சாட்சி: தெரியாது

சிவா: எதிரியின் மனைவியின் வீடு எரிக்கப்பட்டது தெரியாது.

சாட்சி: அவ்வேளை நான் ஊரில் இல்லை. இந்தியாவுக்குச் சென்றிருந்தேன். திரும்பி வந்ததும் வீடு எரிக்கப்பட்டது பற்றிக் கேள்விப்பட்டேன்.

சிவா: எதிரியின் மனைவி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டது தெரியும்?

சாட்சி: தெரியாது.

சிவா: எதிரியின் மனைவி தாக்கப்பட்டதுபற்றி உமக்கு இன்றுவரை தெரியாது?

சாட்சி: தெரியாது.

சண்முகம் செல்லத்துரை என்பவர் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:- 'சம்பவ நேரம் தோட்டத்தில் நின்றேன் காலை 7-30 மணிக்குச் சம்பவம்பற்றி தெரியவந்தது. துவக்குச் சூட்டுக்கு உள்ளான ஏழு பேரையும் கண்டேன்.

''குற்றுயிராக இருந்தவர்களை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தேன்.''

### இன்ஸ்பெக்டர் நாதன் சாட்சியம்

களுத்துறைப் பொலிஸ் பயிற்சி நிலையத்தில் தற்போது கடமையாற்றுபவரும் யாழ்ப்பாணம் பொலிஸ்நிலையத்தில் முன்னர் கடமையாற்றியவருமான இன்ஸ்பெக்டர் என். கதிர்காமநாதன் சாட்சியமளிக்கையில் சம்பவம் பற்றிய தகவல் கிடைத்ததும் யாழ்ப்பாண ஏ. எஸ். பி யின் உத்தரவின் பேரில் தாம் வேலணை சென்றதாகவும், பின் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் வைத்து அவரின் வாக்குமூலங்களைப் பதிவு செய்ததாகவும் கூறினார்.

### செத்தைக்குள் கண்டெடுத்த துப்பாக்கி

ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. ரி. ஜெயக்குமார் சாட்சியமளிக்கையில் சொன்னதாவது:

சம்பவம்பற்றித் தகவல் கிடைத்ததும் ஸ்தலத்திற்குச் சென்றேன். விசாரணை நடத்தினேன். எதிரி பின்னர் நீதிமன்றத்தில் சரணடைந்தார். அவரை நீதிபதியின்

[8ம் பக்கம் பார்க்க]

### சங்கச் செய்திகள்

[6ம் பக்கத் தொடர்ச்சி]

யம், உபதலைவர்கள் சி பொ வேலாதபிள்ளை, மா இரட்ணசிங்கம், த கணேசபிள்ளை, காரியதரிசி அ கந்தையா, வே வினராஜா, பொருளாளர் ஆ ரங்கராஜன், நிர்வாக உறுப்பினர் ஏழுபேர்.

### யாழ். இளைஞர் கழகம்

யாழ் இளைஞர்கழக நிர்வாக உறுப்பினர்: போஷகர் சட்டத்தரணி சி நாகராசா, உபபோஷகர்கள் நா செல்லப்பா, டாக்டர் வே யோகநாதன், டாக்டர் வி கே சண்முகநாதன், தலைவர் சு இ சரவணபவான், உபதலைவர் சி மகேந்திரன், செயலாளர் அ கனகலிங்கம், உபசெயலாளர் செல்வி கு ஜெயக்குமாரி, தனாதிகாரி து ஸ்ரீகிருஷ்ணராசா, உபதனாதிகாரி க இராஜேஸ்வரன், பத்திராதிபர் ப ஜெயபதி, நிர்வாக உறுப்பினர்கள் மூவர்.


**நாகம்ஸ்**
[சுன்னாகம்]
தினசரி: 6-45, 10-00
ஜெய்சங்கர்
நடித்த
**துணிவே துணை**

**புலோலி சினிமாஸ்**
(பருத்தித்துறை)
தினசரி 6-30, 9-45.
சிவாஜி - சாவித்திரி
**குறவஞ்சி**

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-60
சனி, ஞாயிறு: 2-30,
சிவாஜி — பத்மினி
**பாலாடை**

# "என் சேலையை உரிந்து என்மேல் சிறுநீர் கழித்தனர்

## நடந்ததை அறிந்து கணவர் ஆத்திரமுற்றார்"

### வேலணை 7பேர் கொலைவழக்கில் எதிரியின் மனைவி சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

"ஒரு நாள், என் வீட்டிற்கு கோடரிப்பிடி, திருக்கை வாலுடன் இருவரும் ஆயுதமின்றி மற்றிருவரும் வந்தனர். அவர்களுக்கு எதிராக நான் பொலிஸில் புகார்செய்த காரணத்தால் அங்கு வந்த அவர்கள் என் சேலையை உரிந்ததுடன், என் வாயைத் திறக்கச் சொல்லி என் மீது சிறுநீர் கழித்தனர்"

இவ்வாறு வேலணை ஏழுபேர் கொலைவழக்கில் எதிரியின் மனைவி சுந்தரலிங்கம் இலட்சுமிப்பிள்ளை (வயது 42) சாட்சியமளிக்கையில் அழுதவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து சாட்சியத்தில் சொன்னதாவது:

"கந்தர்மடத்தில் தற்போது வசிக்கும் நான் எதிரியாக இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள என் கணவருடன் பத்து வருடங்களாக வாழ்ந்து வருகிறேன்.

என் கணவர் வட்டக்கச்சியில் தமது சகோதரியின் கமத்தில் வேலைசெய்துவருகின்றார்.

"நான் செய்த தோட்டத்திற்கும் அவர் உதவி செய்வதுண்டு நான், கணவர் வட்டக்கச்சியில் இருக்கையில் இங்கு தனித்து வாழ்ந்தேன். எமக்குப் பிள்ளைகள் இல்லை.

### மிளகாய்க் கன்றுகள் களவு போயின

1976ம் ஆண்டு தை மாதம் என் மிளகாய்க் கன்றுகள் களவுபோய்விட்டன. இரவு நேரம் அக்களவைச் செய்தார்கள். ராஜரத்தினம், யோகரத்தினம், தியாகராசா ஆகியோர் மீது எனக்குச் சந்தேகம் ஏற்பட்டது.

ஊர்காவற்றுறைப் பொலிஸில் அவர்களுக்கு எதிராகப் புகார் செய்தேன்.

பொலிஸார், வந்து தாம் சந்தேகநபர்களை எச்சரித்து விட்டுப்போவதாக என்னிடம் கூறினர்.

இதனையடுத்து என் வீட்டிற்கு ராஜரத்தினம் கோடரிப் பிடியுடன் வந்தார். தியாகராசா கையில் திருக்கைவால் இருந்தது

என்னைப் பொலிஸாருடன் தொடர்புபடுத்தி, தகாத விதத்தில் சம்பந்தப்படுத்தி ஏசிய ராசரத்தினம், என்னைக் கோடரிப்பிடியால் அடித்தார். தியாகராசா திருக்கைவாலினால் அடித்தார். யோகரத்தினம் காலால் உதைத்தார்.

ராசரத்தினம் என் வாயைத் திறக்கச் சொன்னார் நான் மறுத்தேன். அவர்கள் என் மீது சிறுநீர் கழித்தனர். என் சேலையையும் உரிந்தார்கள்.

கீழே கிடந்து குழறினேன். எவரும் உதவிக்கு வரவில்லை. பின்னர் அவர்கள் போய்விட்டார்கள். வேறு ஆட்கள் வந்து என்னை ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர் ஒன்பது நாட்கள் ஆஸ்பத்திரியில் இருந்தேன்.

### வீடு எரிக்கப்பட்டது பொருட்கள் சேதம்

முன்னர் மிளகாய் களவு பற்றி பொலிஸில் புகார் செய்யச் செல்கையில் தங்கம்மா என்பவரும் வந்திருந்தார். அவர் வீட்டில் சென்று கலாட்டா செய்யப் போவதாகக் கூறிச் சென்றனர். இதைத் தொடர்ந்து என் வீடு எரிக்கப்பட்டது. பொருட்கள் யாவும் நொறுக்கப்பட்டன. என் தாய் வீட்டில் வசித்தேன்.

இது நடந்தது 9-ம் திகதி. பின்னர் 18ம் திகதி என் கணவர் வந்தார். சம்பவம் நடக்கையில் அவர் வீட்டிலிருக்கவில்லை. நான் அவருக்குத் தகவல் கொடுக்கவும் முடியவில்லை. உறவினர் அறிவிப்பார்கள் என்று நினைத்திருந்தேன். வந்தவுடன் "என்ன நடந்தது? என்று கணவர் கேட்டார். சொன்னேன்; ஆத்திரமுற்றார் அவர்.

பொலிசாரிடம் தாம் தாக்கப்பட்டதுபற்றி வாக்கு மூலத்தில் கூறியதாகவும் அவர்கள் வேறு ஏதும் கேட்காமையால் தம்மை பிரஸ்தாபசந்தேகநபர்கள் மூவரும் அவமானப் படுத்தியது பற்றிக் கூறவில்லை என்றும் இலட்சுமிப்பிள்ளை சொன்னார்.

எதிரி தரப்புச் சட்டத்தரணி திரு. எம். சிவசிதம்பரம் தொகுப்புரையை ஆரம்பித்தார். [உ]



யாழ்ப்பாணம் தந்திப் பரிவர்த்தனை நிலையத்தில் கடந்த சில வருடங்களாகச் சேவையாற்றி சமீபத்தில் பூநகரித் தபால் நிலைய அதிபராகப் பதவியேற்ற திரு. எஸ். தர்மராசாவுக்கு யாழ். தபால் தந்திப் பரிவர்த்தனை நிலையசக ஊழியர் பிரியாவிடையளித்தனர். திரு. தர்மராசா யாழ்ப்பாணத்தில் கடமையாற்றுகையில் நெருக்கடிச் சமயத்திலும் திரு ஜி. ஜி., திரு. எஸ் ஜே. வி. மறைந்த சமயத்திலும் பெரும் பணியாற்றிப் பாராட்டுப் பெற்றவர்

## 180 பேருடன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
தாரகந்தோருக்குப் போனேம்.

பொலிஸ்நிலையத்திற்கு அருகிலுள்ள ஆஸ்பத்திரியில் என் 8 மாதக் கர்ப்பிணி மனைவியை அனுமதித்தேன். நான் பொலிஸ் நிலையத்திற்குப் போனேன், மாலை 4 மணி முதல் இரவு 8 மணிவரை பொலிஸ்நிலையத்தில் இருந்தேன். அப்போது என் வீடு கொள்ளையடிக்கப்பட்டதாகவும் எரிவதாகவும் அறிந்தேன்.

### சிரித்தேன்

இதனைக்கேட்டதும் கவலையடைந்து வேதனைமத்தியில்சிரித்தேன்.

ஒரு பொலிஸ் காரருக்கு நான் சிரித்தது பிடிக்கவில்லை.

'என்ன சிரிக்கிறீர்? என்று கேட்டார்.

என் சொத்துக்களை சூறையாடி வீட்டை தீக்கிரையாக்கிவிட்டனர் இந்தக்கவலையில் சிரிப்புத்தான் வருகிறது, என்றேன்.

கமிஷனர்: ஏன் சிரித்தீர்?- விரக்தியடைந்த நிலையில் சிரித்தேன். மனம் தளர்ச்சியடைந்த நிலையில் அந்நேரம் இருந்தேன்.

கமிஷனர்: அந்த பொலிஸ் யார் என்று தெரியுமா? தெரியாது. அந்த பொலிஸார் 'காணாது உங்களை கொல்லவேண்டும், உங்களுக்குப் பெரிய எண்ணம்' என்று சிங்களத்தில் ஏசினார்.

அந்நேரம், அவ்விடத்தை சுற்றியிருந்த சுமார் 400 அகதிகள் பொலிஸ் நிலையத்தை வந்தடைந்தனர்.

சட்: எப்போது? 19ம் திகதி இரவு.

கமிஷனர்: எத்தனை மணிக்கு? 9 மணிக்கு கூட்டுறவுச் சங்க லொறி ஒன்றை ஏற்பாடு செய்தார்கள். அதில் பொலிஸார் பெரும் சிரமப்பட்டு, 180 பேரை அடைத்தார்கள். குருநாகல் அகதிகள் முகாமிற்கு அனுப்பினார்கள்.

கமிஷனர்: எததனை பேர்?- 180 பேர். எனக்கு ரூ. 15,000 நஷ்டம் ஏற்பட்டுள்ளது சில பொருட்கள் மீட்கப்பட்டுவிடன.

சட்டத்தரணி பார்லட்: இப்ப எங்கே வேலைசெய்கிறீர்?- தருமபுரம் ஆஸ்பத்திரியில்.

சட்: ஏன் இங்கு வேலை பார்க்கிறீர்?- கலவரத்தின் போது தமிழர் துன்புறுத்தப்பட்டனர். தமிழ்ப்பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். சொத்துக்கள் சூறையாடப்பட்டன ஒருவிதபாதுகாப்பும் இல்லை இதெல்லாம் அறிந்தபின் சிங்களப்பகுதியில் கடமையாற்றநான் தயாரில்லை. நாங்கள் பொதுமக்களுக்கு சேவைசெய்கிறோம் அப்படிப்பட்ட எங்களுக்குப் பொலிஸ் பாதுகாப்பு இல்லை. இந்தநிலையில் நான்செல்லவிரும்பவில்லை.

சட்டத்தரணி அண்டவுட் மணிவாசகர்: உமது 8 மாத கர்ப்பிணியும், அந்த லொறியில் ஏற்றி அனுப்பப்பட்டார்?- ஆம்.

சட்: குருநாகல் முகாமிலிருந்து எங்குபோனீர்கள்?- முகாமிலிருந்து யாழ்ப்பாணம் போக ரூ. 12-40 சதம் கேட்டார்கள். இதுபற்றி குருநாகல் அரசாங்க அதிபரைக் கேட்டேன்:

பணமிருந்தால் பஸ்ஸில் ஏறும் அல்லது கீழே இறங்கும்' என்றார். பஸ்ஸில் போகாவிட்டால், கொழும்பிற்குப்போய் கப்பலில்போகவேண்டும் என்றார்கள்.

என்னிடம் காசு இருந்ததால் பஸ்ஸில் சென்றேன் 21ம்தேதி யாழ்ப்பாணம் வந்தேன். நான் இடமாற்றம் கேட்டேன் தருமபுரம் ஆஸ்பத்திரிக்கு மாற்றிவிட்டார்கள்.

கல்கமுவ ஆஸ்பத்திரி வார்ட்டிலிருந்த எனது மனைவியை ஊரடங்கு சட்டநேரம் ஆஸ்பத்திரி வேலியால் ஒருபொலிஸின் உதவியுடன் கூட்டிவந்து லொறியில் ஏற்றிவந்தேன்.

சமூக சேவைப் பகுதி இதுவரை எவ்வித உதவியும் அளிக்கவில்லை. [க]

## சாட்சியின் மனைவி துப்பாக்கிக்கு பலி!

[கொழும்பு]

காலி உயர் நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கு ஒன்றின் சாட்சியான திரு போபகே டி விமலசிறி என்பவரின் கர்ப்பிணி மனைவி துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன் தினம் காலி உயர் நீதிமன்றத்தில் சாட்சியாக ஆஜரான திரு போபகே டி விமலசிறி நேற்று தமது வீட்டு விறாந்தையில் மனைவியுடன் உரையாடிக்கொண்டிருந்தபோது துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடைபெற்றது என்று தெரிவிக்கப்பட்டது.

8 மாதக் கர்ப்பிணியான திருமதி விமலசிறி (வயது 25) துப்பாக்கிச் சூடு பட்டதும் ஸ்தலத்திலேயே துடிதுடித்து மரணமானாராம்.

## புதிய அரசாங்க அதிபர் இன்று பதவியேற்பு!

[வண்ணார்பண்ணை]

யாழ். மாவட்ட அரசாங்க அதிபராக திரு பெர்னாண்டோ இன்று பதவியேற்கவிருக்கிறார்.

இதுவரை யாழ். அரசாங்க அதிபராகஇருந்த திரு டபிள்யு ஏ. எல். விஜயபால நேற்று செவ்வாய்க்கிழமை தமது புதிய இடத்திற்கு புறப்பட்டுச் சென்றார்.

புதியஅரசாங்க அதிபர் பெர்னாண்டோ இன்று காலை தமது யாழ். அலுவலகத்தில் கடமையாற்றுவார் என்று தெரியவந்துள்ளது.

## தேவை

நெசவு வேலையில் நன்கு அனுபவமுள்ளவர்களும், நெசவு வேலை பழகவிரும்பும் பெண்பிள்ளைகளும் தேவை. தகுதிக்கேற்ற சம்பளமும், தங்கும் வசதிகளுமுண்டு. விண்ணப்பிக்கவும். அருணகிரி இண்டஸ்ரீஸ் 42 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 8642

## நினைவாஞ்சலி

### இராசலிங்கம் வசந்தகுமார்

இன்று நல்லைக்கந்தன் திருமலர்ப்பாதங்களில் ஐந்தாண்டு நிறைவெய்தி மகிழும் எங்கள் உயிரே மைந்தா! எங்கள் உணர்வே அண்ணா! எங்கள் உலகமே நீ யென்பாயே! எங்கள் கண்கண்ட தெய்வமே! நின்மலர்ப்பாத கமலங்களைப் பக்தியுடன் வணங்கிநிற்கின்றோம். காத்தருள்புரிவாயப்பா. என்றும் எமதுள்ளே நின்னைக் காணும் அப்பா, அம்மா, தங்கை பொபி, தங்கை றூபி, கொழும்புப் பெரியப்பா, பெரியம்மா, உறவினர்கள், நண்பர்கள். (அக்குவைனஸ் கணக்கியல் மாணவன் வசந்தகுமார் அமரராகி இன்று ஐந்தாண்டு நிறைவாகும்.)

## நாகவிகாரை...

[5ம் பக்கத் தொடர்ச்சி]
கள்.

சட் கதிர்காமர்: பொறுப்புணர்ச்சியென்றால் அனுபவம் இருக்கவேண்டும்? ஆம்.

சட்: அன்று துவக்குகளுடன் சென்றவர்கள் உமது அபிப்பிராயப்படி அனுபவமற்றவர்கள்?-ஆம். பொலிஸ் நிலையத்தில் அனுபவம் உள்ளவர்கள் இருந்தார்கள். ஆனால் அவர்களைக் கூப்பிடவில்லை அன்று சென்றவர்களில், பெரும்பாலானோர் அனுபவமில்லாதவர்கள்.

சட்: அவர்கள் சேவை எவ்வளவு காலம்?- இரண்டுவருடத்திற்கு உட்பட்டவர்கள்.

சட்: பொறுப்புணர்ச்சியுள்ளவர்களுக்கு அனுபவம் மட்டுமல்ல. துவக்குபாவிக்கிறதற்கும் பொறுப்பு வேண்டும்? ஆம்.

சட்: பொலிஸ்காரரர் எல்லாரையும் நம்பி துவக்குகொடுப்பதில்லை- இன்றைய பொலிசார் றைபிள் கொடுப்பது சுடத்தான் என்று நினைக்கிறார்கள். (சிரிப்பு)

சட்: யாரைச்சுட? மக்களைச் சுட (சிரிப்பு)

சட்: எல்லாருக்கும் சுடத் தெரியுமா?- றைபிள் பாவிக்கத் தெரியாத பலர் இன்று பொலிசில் இருக்கிறார்கள் (சிரிப்பு)

சட்: இரண்டுமூன்று வருட சேவையில் உள்ளவர்களிடம் .303 றைபிள் கொடுத்தால் என்ன தெரியும்?- அவர்களுக்குச் சுடமாத்திரம் தெரியும் (சிரிப்பு)

சட்; பொலிசாருக்குச் சுடப் பயிற்சியளிக்கப்படுகிறது? ஆம்.

### 35 வருடப் பயிற்சி

சட்: உமக்கும் அளிக்கப்பட்டது? ஆம். 35வருடம்பயிற்சி பெற்றேன். என்றும் தோல்வி போகவில்லை. அதனால்தான் நட்சத்திரபட்டி பெற்றிருக்கிறேன். சுடத்தெரிந்தவர்களுக்கு பட்டி கொடுக்கப்படுகிறது.

சட்: யூனிபோமில் சுடத்தெரிந்தவர்களுக்கு பட்டி உண்டு?-ஆம்.

சட்: அன்று போனவர்களுக்கு பயிற்சி இல்லை?- அநேகருக்குப் பயிற்சி கிடையாது.

சட்: .303 றைபிளால் ஒரு மைல் தூரத்திலுள்ளவர்களுக்கும் சுடலாம்? சரியாக 2000 யாருக்கு அந்தச்சூடு பிடிக்கும்.

சட்: 303 புலட்டினால், 30 யார் தூரத்திலுள்ளவர்களுக்குச் சுட்டால் என்ன நடக்கும்? -சுக்குசுக்கலாய் போய்விடுவார்கள்.

தகவல் புத்தகத்தின் மூலப்பிரதியைப் பார்வையிட்டபின் மீண்டும் கான்ஸ்டபிள் சட்டநாதபிள்ளை அழைக்கப்படுவார் எனத் தெரிவிக்கப்பட்டது. (௧)

## பத்துப்பேரை

(7ம் பக்கத் தொடர்ச்சி)
அனுமதியுடன் கூட்டிச்சென்று புளியம்பொக்கணையில் உள்ள அவரது தம்க்கை வீட்டில் செத்தைக்குள் மூன்று பாகங்களாக கழட்டி சாக்கு ஒன்றில் சுற்றிவைக்கப்பட்டிருந்த துப்பாக்கியைக் கைப்பற்றினேன். பொலிஸ் சார்ஜன்ட் வீரசிங்கவும் சாட்சியமளித்தார்.

இத்துடன் பிராஸிகியூசன் தரப்பு சட்டத்தரணி தமது சாட்சியங்கள் பூர்த்தியடைந்து விட்டதாகத் தெரிவித்தார்.

எதிரி சாட்சியமளிக்க விரும்புகிறாரா? என்று நீதிபதி கேட்டபோது அவர் சாட்சியமளிக்கவில்லை என்றும் அவரது மனைவி சாட்சியமளிப்பாரென்றும் எதிரி தரப்புச் சட்டத்தரணி தெரிவித்தார். (உ)

இப்பத்திரிகை ஈழநாடு. லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு மார்ச் மாதம் 1-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389. Registered as a Newspaper in Srilanka